

“ஸத்குரு தர்ஸனம்”!!!
பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா



# "ஸத்குரு தர்ஸனம்"!!!

## பொருளடக்கம்


௧. ஸத்குருவின் ஸ்வயம் பிரகாசம்---------------------------------1

௨. இறைவன் கருணை-------------------------------------------௩

௩. ஆசையே அவஸ்தை------------------------------------------1௩

௪. பக்தனும், ஸ்ரீபகவானும்---------------------------------------17

5. கேள்வி பதில்-----------------------------------------------௨௩

6. பிரார்த்தனை----------------------------------------------5௯

7. குருவின் தெளிநிலை------------------------------------------61

8. மாயா மனம்----------------------------------------------81

௯. ஜீவ ரட்சிப்பு----------------------------------------------௯௩

10. ஜீவ சிட்சிப்பு---------------------------------------------௯௩

11. ஜீவ அழிப்பு----------------------------------------------௯6

1௨. ஓர் சாதகனின் தெளிவு----------------------------------------100

1௩. ஸ்வய அனுபவம்------------------------------------------108


எல்லாம் நீ!



ஸத்தியம் பேசு.
தர்மம் செய்.
நாவை அடக்கு.
கருணையோடு இரு.

"ஸத்தியம் பேசினால், தர்மம் நிலைபெறும்"!

# "ஸத்குரு திருவடி துணை"!!!

# "நம்பினோர் கெடுவதில்லை"!!!

# ஸ்ரீராம், ஜெயராம்; ஜெய ஜெயராம் ஓம்"

# "அகம் பிரம்மம், ஜெகம் பிரம்மம்,

# "அகமே எல்லாம்!!!"

# "ஜெகம், பரமும், ஜீவர்களும்,"

# "சிறிதும் இல்லை!!!"

மனம் உண்டு என்றால், ஜகத், ஜீவ, ஈஸ்வராதிகள், உண்டு! தன்னை அறியும் அறிவு நாமே ஆனால், "**நாமரூபம்**"! அனைத்தும் இல்லவே இல்லை! நாமரூபம் என்றால் பழம் ஆகும்! நாமரூபம் அழிந்தால் தான் பழம் சுவைக்க முடியும்! சுவைத்தால் பழம் இல்லை!



# 1

# ஸத்குருவின் ஸ்வயம் பிரகாசம்.

வித்தைகளின் அதிபதி சாமான்ய குருவாகும். ஜீவன்முக்தியின் அதிபதி ஸத்குருவாகும். கர்மா, பக்தி, யோகத்தை, ஒழுக்க முறையுடன், போதித்து தெய்வீக நிலையை உணர்த்தி, "தெய்வநிலையில்" ஸ்தாபிதம் செய்யக் கூடியவர் சாமான்ய குருவாகும். உலகின் நிலையில் "பயத்தை" ஒழித்து, தெய்வீக நிலையில் "மயக்கத்தை" அத்வைத அனுபவ போதனையால் அகற்றி, தாம் நாமாக இருக்க அருள்பவர் ஸத்குரு. தெய்வத்தை காட்டுபவர் சாமான்ய குரு. தெய்வமாகவே ஆக்குபவர் ஸத்குரு.

"கண்டிப்பு, தண்டிப்பு" இவைகளால் பேர் புகழ், பட்டம், பதவி, முதலிய "பிரவர்த்தி" மார்க்கத்தை சுட்டிக் காட்டி, தெய்வ அம்சமாக "உலகின்" நிலையில் பிரகாசிக்கச் செய்பவர் சாமான்ய குரு.

கண்டிப்பு தண்டிப்பு இல்லாமல் பேர், புகழ், பட்டம், பதவி, இவைகளில் சிக்கவிடாமல் "பந்த நிவர்த்தி" மார்க்கத்தை மட்டும் உணர்த்தி, தெய்வீகத்தை தமக்குள் ஆக்கி,



அங்கு "ஹட்சி" இல்லாமல் "பணியும் கனியும்" அங்கு கொண்டு, அடங்கிய நிலையில் அனைத்தும்
தாமாக செய்து, பிரகாசிக்கச் செய்பவர் ஸத்குரு.

தவ வலிமையும், மந்திர எந்திர வடிவங்களையும் யோகா
னுஷ்டான பலத்தையும், தேவ தெய்வ பூஜை முறைகளையும்,
இன்னமும் பல, "அற்புதங்களை" காட்டி, அதன்
நிலையில் "சக்தி" சொரூபமாகவே விளங்குபவர் சாமான்ய குருவாகும்.

எந்த வல்லமைகளும் இல்லாமல், யோகமாயாவை பயன்
படுத்தாமல், "யோகமாயாவை" தம்முள்
அடக்கிய நிலையில், லௌகீக தெய்வீக எந்த உபா
தைகளும் இல்லாமல், "பிரம்மானந்த
பரவை" இருப்பவர் ஸத்குரு.

ஸாமான்ய குரு தெய்வத்தை காட்ட முடியும். ஆனால் ஸத்குரு
தெய்வமாகவே ஆக்க முடியும். ஸாமான்யகுரு இறை கருணை
யென இயங்க முடியும். ஆனால் ஸத்குரு இறை கருணையை
"பரகருணையோடு" இணைந்து எந்த வல்லமையும்



உ

அற்ற நிலையில், அதிரகஸ்யமாகவும், **“சூக்ஷ்மநிலையில்!”** இயங்கவும் இருக்கவும் முடியும்.

# உ. “இறைவன் கருணை!”

உலக பொருள்கள் அனைத்தும் அவனுடையதே! அனைத்து இயக்கமும் அவனுடையதே! அவனன்றி அணுவும் அசையாது! என்பதுவும் ஸத்தியமே!

ஆனால் அனைத்து ஜீவ கோடிகளின் இயக்கமும், அவரவர் வினையின்படி ஒழுங்காக, எந்த பாரபட்ச தோஷமும் இல்லாமல் விகிதாச்சாரப்படி, ஒழுங்காக நடைபெறுகிறது.

ஆனால் **“மனம்படைத்த”** இந்த மனித **“இனத்திற்கு!”** மட்டும் கஷ்ட நஷ்ட, இன்பதுன்ப, விபரீத வித்தியாசமாக நடக்கும் நிலையில் **“குற்ற”** (பார்வையில் விபரீத நிலையும், கேட்கும் வகையில் வித்தியாச நிலையும்) **“குறை”** யாகவும், தோன்றுகிறது.

காரணம்? இருமனமைய கற்பனையில், சொந்த பந்த பாச **“தன்மான இனக்கவர்ச்சியின்!”** போதை மயக்கத்தால் தோற்றுகிறது. ஆனால்???



உ

இறைவன் கருணையை உணர முடிவதில்லை!

(1) உன்னுடைய குற்றம் பார்வையில் தோற்றும்!

(2) உன்னுடைய குறைகள் வார்த்தைகளில் தோற்றும்!

நம் இறைவன் கருணையானது, இரண்டு நிலைகளில் செயல்படும்! ஒன்று, "அறக் கருணை"! மற்றொன்று, "மறக் கருணை"!! அதாவது ஒன்றில் மென்மை தோன்றும். மற்றொன்றில் கடுமை தோன்றும். இது அவரவர் "வினையின் கர்ப்பனையை" பொருத்து மனம் அமைப்பதே தவிர உண்மையில் இல்லவே இல்லை.

இதை விளக்க ஓர் உதாரணம்?

ஓர் முரட்டுபக்தன், ஓர் சர்க்கஸ்காரன் வளர்க்கும், சிம்ஹங்கள் நான்கை, அதன் கூண்டினுள் கண்டான். அந்த சர்க்கஸ்காரனிடம் சொன்னான், நான் இந்த சிம்ஹங்களின் கூண்டுக்குள் சென்று வருவேன். என் இறைவனின் கருணை, என்னை ரட்சிக்கும். என் இறைவன் என்னை எப்படி ரட்சிக்கிறான் பாருங்கள் எனச் சொல்லி விட்டு, அச் சிம்ஹங்களின், கூண்டுக்குள் சென்று கதவை தாளிட்டுக் கொண்டான். கூண்டுக்குள் இருந்த நான்கு சிம்ஹங்களும் கடும் பசியால் இருந்தன போலும்? கூண்டினுள் நுழைந்த இந்த முரட்டுபக்தனை சிம்ஹங்கள் நான்கும் நார் நாராக கிழித்து, அல்வா சாப்பிடுவது போல், சாப்பிட்டு விட்டு அமைதியாயின!



இதைப்படிக்கும்போது, இங்கு இறைவனின் கருணையை காணோமே என்றும், ஓர் பக்தனை இவ்வாறு செய்யலாமா என்றும், கருணாமூர்த்தியாகிய ஸ்ரீபகவான், இப்படி கைவிட்டுவிட்டானே, இதுதான் ரட்சிப்பா என்றும், இப்படி நடந்தால், எவனுமே தெய்வத்தை நம்பமாட்டானே என்றும், இறைவனின் கருணை என்னவாயிற்று என்றும், கேட்கத்தோணுதா ????

எம் ஆனந்தக் குழந்தைகளே! இக்கேள்விகள் எல்லாம் "முன், பின்"! அறியாத் தன்மையாகும்! இங்கு "ஒருபக்கம்"! மட்டும் காண்கிறீர்கள்! இங்கு "மறுபக்கம்"! காணும் நிலையில் உங்களுக்கு இறை நம்பிக்கையின் "பொறுமை"! இல்லாததே காரணமாகும். இதன் மறுபக்கத்தை காண்பீர்களாக.

இந்த முரட்டுப்பக்தன், முன் ஜன்மாவில், ஓர் வேடுவனாக பிறந்திருந்தான். ஓர் வேட்டையில், நான்கு முயல்களை பாணத்தால் அடித்து, அந்த நான்கு முயல்களையும் இவன் ஒருவனே தின்று தீர்த்துவிட்டான். அந்த நான்கு முயல்களும், நான்கு சிசுக்களாக வடிவெடுத்து, இவனுக்காக காத்திருந்து, கொண்ட கடனை உண்டு கழித்துக் கொண்டன.



உ

கொடுத்ததை வாங்க வேண்டும்! வாங்கியதை கொடுக்க வேண்டும்! கணக்கு கொடுத்து முடிக்கவே இவ்வுலகம் இருக்கிறது. ஒருவர் கணக்கை ஒருவர் கொடுக்கவோ, மாற்றவோ மறுக்கவோ விலக்கவோ முடியவே முடியாது.

இப்போது நடைபெறும் காரியம், ஒன்று "முடிவுறும்!" அல்லது "தொடர்வுறும்!" ஒருபக்கத்தை மட்டும் கண்டு, அதிர்ச்சியுற்று அவசரமாக முடிவெடுக்கும் "கலிகாலமாகும்!"

இங்கு நம் இறைவனின் கருணை, யெப்படி செயல்படுகிறது என்றால். சிம்ஹம்கள் அப்பக்தனை கொல்லும் சமயம், அவனிடம் ஸ்ரீ பகவன் நாமஸ்மரணை, வெகுவாக இருந்தது. ஆகவே அவனுக்கு, வேறொரு புனிதமான ஜன்மா கொடுத்து, அவனை ஸ்ரீ பகவான் ஆட்கொண்டான். இங்கு இந்த சமயம், அருகில் நின்று, பார்த்துக் கொண்டிருப்பவர்களுக்கு என்ன தோணும்? என எண்ணிப் பாருங்கள். ஒருவன் மரணத் தருவாயில், இப்படி ஸ்ரீ பகவானை இறைஞ்சி, கதறி கத்தி அழைக்கிறானே. இச்சமயம் அந்த இறைவன், நேர்முகமாக காக்கலாம். அல்லது மறைமுகமாக (வேறொருவர் மூலமாக) காக்கலாமே! இப்படி ஓர் பக்கத்தை நிர்க்கதியாக, விட்டுவிட்டதோடல்லாமல்,



"பதைபதைக்க கோரமான"! சாவு நிலைமை கொடுத்தால், அந்த தெய்வத்திற்கு கண் இல்லையே யென, தூற்றத்தான் தோன்றும். "காணக்குமுடிகிறதை" அமைதி காக்க முடியாது தான். இங்கு நம் ஸ்ரீபகவானின் காரியம், "மறக்கருணையாகிறது"!

இங்கு அப்பக்தன், அக் கொடிய முன்வினை தேடாதிருந்தால், தன் ஜீவமாகவோ, பிறர் ஜீவமாகவோ, அவஸ்யம் ரட்சிப்பான். அந்நியகாலையில், அவன் கூப்பிட்ட ஸ்ரீபகவன்நாமமானது, "அத்தாவம்"! அழியாத நிலையில், ரட்சித்தால் அங்கு அது, "அறக்கருணையாக"! மாறிவிடும்.

அப்போதுள்ள தாவத்தை, அழியாமல் காப்பது, அறக்கருணை யென்றும். ஸ்ரீபகவன் நாமஸ்மரணையோடு இருந்தாலும் "முன்வினையின்"! காரணமாக, அந்தாவம் அழிக்கப்பட்டு, வேறொரு புனித தாவம் கொடுத்து ஆட்கொள்வதால், அது மறக்கருணை யென்றும் பேசப்படுகிறது.



ஆனால் இக்கலியில் "முடிவுரை"யை எவரும் விரும்புவதில்லை. அதற்கு மாறாக "தொடர்வினையையே" மக்கள் விரும்புகின்றனர். காரணம்? எண்ணம், சொல், செயலால், ஒருவரை ஒருவர் "பட்சிக்கும்" கலிகாலமாகிவிட்டது. ஒருவரை ஒருவர் "ரட்சிக்கும்" ஸாத்வீக காலம் இல்லவே இல்லை! ஜடபரதன் வரலாற்றில் படித்த ஓர் சம்பவத்தை இங்கு நினைவில் கொள்ளலாம். ஓர் மான் ஜீவ காருண்ய நிமித்தமாக, பரதன் திரும்பவும் மான்தாவம் எடுக்க நேர்ந்தது. இங்கு வினையும், மனமும், எப்படி பின்னி விளையாடுகிறது என உணர்வீர்.

ஓர் நிறை கர்ப்பிணியான மான், ஓர் ஜலப்பிரவாகத்தை, தாவிக் குதிக்கும்போது, அதன் கர்ப்பம் நழுவி ஜலப்பிரவாகத்தின் அருகில் விழ, அத்தாய் மான் விதிவசத்தால் இறந்து போகிறது. இதை ஜபதபத்தில் ஈடுபடும் நம் பரதன் காண்கிறான். இவ்வி இவ்வி விதிதேவனாகிய இறைவன், காண்பிக்கிறான். இங்கு இப்பரதனின் மனமே பலமாக வேலை செய்கிறது. அந்த மாயாமனதின் "கர்த்தத்துவத்தை" கவனிக்கவும்.



இதை கவனித்த பரதன், இம்மான் குட்டிக்கு,
ரட்சகன் யார் என கேட்டான். அம்மான்
குட்டியால், பந்தப்பட்ட மனமானது, உடனே
"நான்தான்!" என அஹங்கரித்தது.
இதை என்ன செய்வது எனக் கேட்டான். மற்றும்
துஷ்டமிருகங்களிடம் இருந்து, இதை காப்பாற்ற முடியுமா என்றால்,
"என்னால் முடியும்!" என பாசத்தால்
சிக்கிய மனமானது, அதிகாரத்தால், பின்னிப் பிணைந்து
கொண்டது. இதை எப்படி எங்கே தங்க வைத்து காப்பாற்
றுவது, என கேட்டான். "என்னுடைய!
குடிசையில் வைத்து காப்பாற்ற முடியும் என, "விணப்
பற்றல்!" உடைமையும், உரிமையும், பாராட்டிய
"கர்மமனம்!" ஏற்றுக் கொண்டது. அங்கு நல்ல
மனம் என்ற, மனச்சாட்சி பேசாத சிரித்தது. இதுவே இதயவாஸி என்ற
"அந்தர்யாமி!" ஆகும்! அம்மனச்சாட்சி
கேட்டது. நண்பா! உன் வினைக் கூட்டாகிய தாவமே
உனக்குரியதில்லையே! பிறிதொரு தாவம், உனக்குத் தேவையா?
அதை ரட்சிக்க உன்னால் முடியுமா? நாளை உன் தாவத்தை வாடகைக்கு
கொடுத்தவன், உன் தாவத்தை எடுத்துக் கொண்டால் நீ எங்கி
ருந்து கொண்டு, அதை நீ போஷிப்பாய்? ஆகவே இப்போது நீ
போடுகின்ற, மனமுடிச்சால் வேறொரு தாவம், எடுக்க வேண்டி
வருமே?



அப்போது உன் "மனதின்!" எண்ணமும், சொல்லும், செயலும், உன் "வினையால்!" மாறிவிடுமே! அப்போது நீ என்ன செய்வாய்? இப்போதாவது, எளிதில் விட்டு விடலாம். மேலும் மேலும்

உன் எண்ண அழுத்தத்தால், "பழகி" விட்டால் மனோ அவஸ்தை மிகவும் கடுமையாக இருக்குமே! மேலும் இவ்வுலகமும், அதன் பொருள்களும், அதன் இயக்கமும், ஸ்ரீ பகவானுடையதாக இருக்கும்போது, நீயாக பிணைக்கும் இப்பிணைப்பினால், "நீயாக விரும்பி!"

மற்றும் கஷ்டம், கவலை, பயம், துக்கம், சஞ்சலம், அயர்வு, சோர்வு, அவஸ்யம் உனக்குத் தேவைதானா? என அறிவுரை கூறியது, மனச்சாட்சியாகிய இதயவாணி!

அஹங்கார, அதிகார, அபிமான, ஆதிக்க வெறியான, "உடமையிலும்", "உரிமையிலும்" மாட்டிக்கொண்ட பந்தப்பட்ட மனமானது, கேட்க முடியவில்லையா? கேட்க இடமில்லையா??

சிந்தித்து நோக்குவீர். மனமே காட்சி! மனமே எழுச்சி! மனமே வீழ்ச்சி! ஆகும்.



இங்கு பாலகன் உ..........
↑அம்மான் குட்டிக்கு, அதன் வாயில் அந்த நதி ஜலத்தை விட்டான். அது சுவைத்துக் குடித்தது. இறைவன் கிருபையினால் அது மெல்ல எழுந்து நடக்க, வலு வந்து விட்டது.

இங்கு ஓர் சாதகன், என்ன செய்ய வேண்டும் என்றில் ???? ஸ்ரீ பகவானிடம், முழுமையாக "தம்மை" அர்ப்பணித்த நிலையில், ஹே தயாநிதி! நீ என்ன செய்ய வேண்டுமோ, அதை செய்வாயாக! வினைகண்டு, நிலைகண்டு, "ரட்சிப்போ"/ "சிட்சிப்போ"/ "பட்சிப்போ"/ ஏது தேவையோ, அது உனக்கு தெரியும். எம் தாவமாகிய வினைக்கூடம், ஓர் பதுமையே! என சர்வார்ப்பண நிலையில், ஸ்ரீ பகவானிடம் ஒப்புவித்த நிலையில், "இரண்டொரு"/ நொடிகள் (நிமிடமல்ல) "மௌனம்" காத்தால்.

1. உன் தாவத்திற்கும், அந்த தாவத்திற்கும், "வினை" சம்பந்தம் இருந்தால், மேலும் வினை தொடரா வண்ணம் உன்னை வைத்து அவன் மாயா காரியத்தால் இயக்கி, வினையை முடித்து உன்னை, ஆட்கொள்ளவும் அவனால் முடியும்!



உ

அ. உன் தாவத்திற்கும், அந்த தாவத்திற்கும், "வினை" சம்பந்தம் இல்லையாயின், அதற்கென வினை சம்பந்த தாவத்தை, அங்கு வரச் செய்து, நம் மாயா காரியத்தால், வினையின் காரியத்தை முடிக்கவாம். அது சமயம், இரண்டின் நிலையிலும் நிலை கண்டு, வினை கண்டு, மனதை இயங்க வைத்து, "முன், பின்" கர்மாவை தொடர வைக்கவும் முடிக்கவும் அவனுக்கு சாமர்த்தியம் உண்டு (இங்கு வேறொரு தாய்மான் வந்து, அதை அரவணைத்து செல்லவும் முடியும். அல்லது அம்மான் குட்டிக்கே, தானே ஜலம் அருந்தவும், தானே புல் மேயவும், தன்னை தற்காத்துக் கொள்ளவும், அதற்குரிய "திடசக்தியை" தரவும் அவனால் முடியும்)

ஆ. அம்மான் குட்டிக்கு, "விதி"யும், "வினை"யும், சரியில்லையாயின், அதற்கு ஓர் "மரணத்தை" கொடுத்து வேறோர் தாவம், நிலை வினை கண்டு கொடுத்து, ஆட்கொள்ளவும் முடியும்.

முதல் இரண்டும், "அறக்கருணையில்" முடியும். பிந்தையது மரணம் கொடுத்து ரட்சிப்பதால், அது "மறக்கருணையாக" முடியும் என்று ஸ்ரீ மஹான்களின் கருத்து.



உ

எம் ஞானக் குழந்தைகளே! இவ்விரு கதையும் உணர்த்துவது:—

முந்தையது:—தொடர் வினை முடிவடைகிறது!

பிந்தையது:—புதிய வினை தொடர்கிறது!

இவ்விரு வினைகளுக்கும், இறைவன் பொறுப்பாக மாட்டான். (அதற்கு) "ஆசைப்பட்டோர்!" "அவஸ்தை!" என்பதை உணர்வீர். அவ்வதற்கு ஆசையானது, ஸ்ரீ பகவானிடம் முழுமையாக மனதை விடாததே காரணமாகும்!

## ௨. ஆசையே அவஸ்தை!

ஓர் சமயம், செய்யும் தொழிலே தெய்வம் என்னும் ஓர் "காமவீரன்!" சோம்பலாக இராதே! துரிதமாக வினையாற்று! முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்! என்ற "கலியுகசாமா" வாசகங்களை வலியுறுத்தி, மக்களுக்குப் போதித்து வந்து கொண்டிருந்தான்.

ஓர் நாள் மாலை, ஓர் கிராம பகுதியில், தம்முடைய A.C. காரில் வந்து கொண்டிருந்தான். அதுசமயம், ஓர் சிறிய குடிசையில் வாழும் விவசாயி, தன் குடிசை அருகே உள்ள, ஓர் மர நிழலில், ஓர் கயிற்றுக் கட்டிலில், அக்கட்டிலில் எதுவும் இல்லாத நிலையில், வெறுமனே வெற்றுடலுடன், கௌபீனதாரியாய், படுத்த நிலையில்

உ



கால்மேல் கால் போட்ட வண்ணம், காலை ஆட்டிக்கொண்டே, ஆனந்தமாக இருந்தான்.

இந்த "**டவுண்**" வாசிக்கு, அவனைப் பார்த்ததும், வேகம், ஆத்திரம் கொண்டு, இப்படி "**உழைப்பில்லாமல்!**" சோம்பேறியாக படுத்திருக்கிறானே என்றெண்ணி அவன் அருகில் தன் காரை நிறுத்தி, கீழே இறங்கி அவன் அருகே வந்து, அவனை விசாரிக்கிறான். இனி டவுண் வாசியை **ட.வா.** என்றும், கிராமவாசியை, **கி.வா** எனவும் குறிப்பிடுகிறோம்.

ட.வா:— ஐயா! இப்படி உழைக்க வேண்டிய வயதில், இப்படி உறங்கிக் கொண்டிருக்கிறீரே! இது நியாயமா?

கி.வா:— யாம் உறங்கவில்லையே. விழித்த நிலையில் தானே படுத்திருக்கிறோம்.

ட.வா:— படுத்திருந்தாலும், அது சோம்பல் தானே?

கி.வா:— (எழுந்து அமர்ந்த நிலையில்) யாம் என்ன செய்ய வேணுமென்று எண்ணுகிறீர்?

ட.வா:— சோம்பித் திரியேல் என்றும், முயற்சி திருவினையாக்கும் என்பதையும், செயலே தெய்வம் என்பதையும் மறந்து விட்டீரோ?

கி.வா:— (சிரித்துக் கொண்டே) யாம் அறிவோம். அதற்கு இப்போ யாம் என்ன செய்ய வேண்டும்?

ட.வா:— உம் வயதில் கடுமையாக உழைக்கலாமே? நன்றாக ஓடி ஆடி வேலை செய்யலாமே?

கி.வா:— வேலை செய்தால்?

ட.வா:— பணம் நிறைய சம்பாதிக்கலாம்?



உ

கி.வா:- பணம் சம்பாதித்து?

ட.வா:- பல அடுக்கு மாளிகை போன்று வசதியான வீடு வாங்கலாமே?

கி.வா:- வீடு வாங்கி?

ட.வாசி:- அனைத்தையும் குளு குளு அறை A.C. ஆக்கலாம்.

கி.வாசி:- அப்புறம்?

ட.வாசி:- பிரிட்ஜ் வாங்கலாம். ஆடம்பரபொருளாக இப்படியாக ஒவ்வொன்றாக சொல்லச் சொல்ல, கி.வாசி அப்புறம் அப்புறம் என கேட்டுக் கொண்டே வந்தான். முடிவில் என்னைப்போல் சொகுசு கார் வாங்கலாம் என்றான். முடிவில் ட.வாசி சொன்னான்; A.C. அறையில் குளு குளு குளிரென "குளிர்ச்சியான" அறையில் ஆனந்தமாக தூங்கலாம். A.C. குளு குளு காரில் ஊர்ஊராய் சுற்றிப்பார்க்கலாம். இவ்வாறு "வசதி"களும் "பணத்தால்" பெற முடியும் என்றிருக்கிறான் டவுண்வாசி. பதிலுக்கு கிராமவாசி கேட்டான்:- வசதியாக படுக்கலாம் என்றுயே. யாம் அதைத்தானே செய்து கொண்டிருக்கிறோம். இந்த வேம்பு மர "குளுமையைவிட" உன் "A.C." அறை சுகம் கொடுக்குமா? உன் A.C. அறை வியாதியை கொடுக்கும். இம்மர நிழல் வியாதிகளைப் போக்கும். உன் A.C. காரை விட எம் சைக்கிளும், எம் கால் நடையும் "சுகமும் பலமும்" கொடுக்கும். உன் பாஷையில் "வசதி" தான் என்றால் எம் பாஷையில் "அசதி" தான் என பொருள்படும். (அசதி = வியாதி)



உன்னைப் போல், பணமும், பதவியும், பகட்டும் அதைக் காப்பாற்ற பயமும், கவலையும் இன்னும் வேண்டுமென்ற "பேராசையும்", "துன்பமும்" வருமே அது தேவையா? யாம் சுகமாகவும், ஆனந்தமாகவும் இருப்பது உனக்குப் பிடிக்கவில்லையா? நீ படும் கஷ்டமும் கவலையும் பயமும் எம்மையும் படச் சொல்கிறாயா? "பிணியும், பயமும்" உள்ள ஆபத்தான வாழ்க்கை எமக்கு வேண்டாம். எதிலும் "போதும்" என்ற "நிறைவான" தெய்வீக வாழ்க்கை ஒன்றே போதும் என்றான் கிராமவாசி! அங்கு டவுன் வாசியைக் காணோம்!

உ

# 4. "பக்தனும் ஸ்ரீபகவானும்"!



ஓர் பக்தன் ஆலய வாயிலில் அமர்ந்தவண்ணம் ஏங்கி ஏங்கி அழுது கொண்டிருந்தான். போவோர் வருவோர் எல்லாம் அவனைப் பைத்தியம் என எண்ணி நகையாடினர். அன்று இரவுவரை அவனும் ஆலய வாயிலில் அமர்ந்து போவோர் வருவோரையும் பார்ப்பான், ஆலயத்திலுள் தம் இருப்பில் நேரம் வைத்து அக்கம்பக்கம் பார்க்காமல் வரும் அன்பர்களின் திருமுகத்தையும் அவர்கள் உள்ள ஏக்கத்தையும் அந்த ஏக்கத்தின் கோரிக்கையும் ஆராய்ந்தவண்ணம், காலையும் மாற்றாமல் கரங்களையும் மாற்றாமல், மயிற்பீலி ஒன்று மாத்திரம் அமைந்த கொண்டையையும் தலையையும் அப்படி இப்படி அசைத்தவண்ணம்.

## ததாஸ்து! ததாஸ்து! ததாஸ்து!

(தந்தோம், தந்தோம், தந்தோம்)

என்று சூட்சமமாக கொடுத்தவண்ணம் "நின்ற கோலம் விட்டலனையும்" பார்த்தவண்ணம் அமர்ந்திருந்தான், அந்த உண்மை பக்தன். வந்தவர்கள் அனைவரும் தான் பொருள் போகங்களை விரும்பிக் கேட்டுப் பெற்று கொண்டு "இம்மைக்கும் அந்த மறுமைக்கும்" தேவையானவைகளை வெகு ஆனந்தமாக பெற்றுச் சென்று கொண்டிருக்கிறார்கள்.

இரவு நடைசாத்தும் தருணம் கூட்டம் இல்லை அவிழ்ந்த வேண்டுதலும் இல்லை போலவும். ஸ்ரீ விட்டலன் அந்த செங்கலை விட்டு மெதுவாக இறங்குகிறான். நேராக இந்த பக்தனிடம் வந்தான் ஸ்ரீபகவான்.

ஸ்ரீபகவான்:— குழந்தே! நீ ஒருவன் மட்டும் இங்கே அமர்ந்தவண்ணம் என்ன செய்து கொண்டிருக்கிறாய்? உனக்கு தேவை எதுவும் இல்லையா? வந்தவர்கள் எல்லாம் அவரவர் விருப்பப்படி மனதை வைத்து கேட்டு வாங்கிப் போகின்றார்களே! நீ ஏன் எதையும் கேட்கவில்லை?

பக்தன்:— எம்பிரபுவே! கண்ணா! அவர் கேட்டு கேட்டு வினையைப் பெருக்கிக் கொள்கிறார்கள். ஆதலால் யாம் உன் திருமையால் எதைத் தரச் சித்தமோ அதை "நீ கொடுத்தால் வாங்கி அதை (உனதாக அல்ல) நீயாக பாவனை செய்து ஏற்றுக் கொள்வோம்".

ஸ்ரீபகவான்:— எம் அன்புச் செல்வமே! யாமாக எதையும் கொடுக்க முடியாதே. அப்படி கொடுக்க அதிகாரமும் இல்லை. அப்படி கொடுக்கும் பொருளும் இல்லையே?

பக்தன்:— ஏன் அப்படி?



உ

ஸ்ரீபகவான்:- உலகின் அனைத்துப் பொருள்களும் ஜடஸ்வரூபமே! அவைகளை குண தோஷ பமாக்கி ஏற்றுக் கொண்டு புண்ணிய பாப வினைகளை சேகரித்துக் கொள்வது **மனம்படைத்த**வனின் (மனதின் சொந்தமான மனிதன்) வேலை. ஏன் உன்னிடம் மனம் இல்லையா?

பக்தன்:- என்னப்பா இந்தக் கேள்வி? எனக்கும் மனம் உண்டு அங்கு உன்னைத்தவிர வேறு எதுவுமே இல்லையே!

ஸ்ரீபகவான்:- வேடிக்கையாக இருக்கிறதே? எம்மை மட்டும் அங்கே வைத்துக்கொண்டால் உனக்கு ஆசைகளோ, தேவைகளோ, அவைகளின் வினைப் பெருக்கமோ இல்லையென்கிறாயா?

பக்தன்:- அப்படி வா வழிக்கு? தேவைகளையும் அதைச் சார்ந்த ஆசைகளையும் தொடுத்து எம்மையும் அவர்களைப் போல் மாற்றத்தில் மாட்டி வைக்கப் போகிறாயா? அது தான் இங்கு நடைபெறாது!

ஸ்ரீபகவான்:- சிரித்துக் கொண்டே ஏன் நடக்காது? உன்னை சில கேள்வி கேட்கிறோம் உன் பதில் எப்படி வருகிறதென்று பார்ப்போம்! பக்தனின் தலையைத் தொட்டுக்காட்டி இது என்னது?

பக்தன்:- இது கண்ணனின் தலை!

ஸ்ரீபகவான்:- பக்தனின் கையைத் தொட்டுக்காட்டி இது என்னது?

பக்தன்:- இது கண்ணனின் கை!

ஸ்ரீபகவான்:- பக்தனின் மார்பைச் சுட்டிக் காட்டி இது என்னது?

பக்தன்:- இது கண்ணனின் மார்பு!

ஸ்ரீபகவான்:- இந்த மார்பினுள் என்ன இருக்கிறது?

பக்தன்:- இந்த மார்பினுள் கண்ணன் ஆலயம் இருக்கிறது!

ஸ்ரீபகவான்:- ஓகோ எம் ஆலயம் அங்கு இருக்குமானால் அங்கு யாம் குடியிருக்க வேண்டுமே யாம் அங்கு செல்லலாமா? அங்கேயே குடியிருக்கலாமா?

பக்தன்:- இதில் என்ன தடை? இதற்கு நீ மூல காரணமாக இருந்தாய்! இப்போது காரணமாக இருக்கப் போகிறாய் இவ்வளவு தானே? உள்ளே சென்று அமர். அதுவே உன் இடம் தானே எனச் சொல்லிக்கொண்டே அக்கம் பக்கம் பார்த்தான். தெய்வாதீனமாக அங்கு ஒர் அரிவாள் கிடந்தது. அதை எடுத்து தம் மார்பின் மீது ஓங்கி போட்டுப் போட்டு தம் இருகரத்தால் பலாக்காயை பிளப்பது போல் பிளந்தான். ஹேப்போ நீ தாராளமாக உள்ளே போகலாம்.



உ

இதில் வெகு காலமாக அரூபமாக இருந்தாய் ஆனால் இன்று சொரூப அரூபமாக அமர்கிறாய்.

**உள்ளே, உள்ளே செல்** என ஆணையிட்டது போல அன்பினால் பணித்தான் அந்த உள்ளம் பக்தர்.

எம் ஸ்ரீபகவானும் ஆகா! ஆகா! பரமானந்தம் என உள்ளே சென்று அமர்ந்து விட்டான். உடனே எம் பக்தனும் தம் இடையில் கட்டியிருந்த துணியை எடுத்து தம் மார்பை இருக்கக் கட்டிக் கொண்டான். எம்பெருமான் உள்ளே சென்றதால் பக்தன் பேரானந்தத்தில் மூழ்கிவிட்டான்.

அதிகாலை 3 மணி ஆகிவிட்டது. ஸ்ரீபகவான் உள்ளிருந்தே கேட்டான். குழந்தாய் ஆலயம் திறக்கும் நேரமாகிவிட்டது எம்மை சற்று வெளியே விடுகிறாயா? ஆலய வியாபாரத்திற்காகவும் வரும் மக்கள் கூட்டத்திற்காகவும் யாம் வெளியே சென்று அவர்கள் கேட்கும் பொருள் வியாபாரத்தையும் (போக்குவரவு, பற்று, வரவு) செய்துவிட்டு வந்துவிடுகிறோம் என்றான் எம் இறைவன்.

பக்தன் கேட்டான் உன் ஆலயத்தில் குடியிருக்கப் போகிறேன் என உள்ளே சென்றாய் ஆனால் முடியிருக்கவில்லையே? உனக்கும் வியாபாரத்தின் மீது ஆசைதான் போலும்?

ஸ்ரீபகவான் சொன்னான் உண்மையைத்தான் சொன்னாய் குழந்தாய்! ஆனால் அது எம் இச்சைப்படி நடைபெறும் வியாபாரமல்ல. இச்ஜீவர்களின் மனோ இச்சைப்படி நடைபெற வேண்டிய வியாபாரம். மேன்மை இல்லாத் தன்மையினால் இந்த ஜீவர்களின் மனதை அவர்கள் நிலைக்குத் தக்கபடி வாங்கி அதை பூர்த்தி செய்து அவர்களிடமே கொடுத்து விடுவோம்.

பக்தன் கேட்டான் இக்காரியம் உனக்கு சலிப்பை தரவில்லையா?

ஸ்ரீபகவான் சொன்னான் சலிப்பா அது எப்படி இருக்கும்?

பக்தன் கேட்டான் ஏகாந்தமனம் இல்லாதவனோ? அப்படி மனம் இல்லாத நீ செயல்படுவது எதனால்?

ஸ்ரீபகவான்:— எம் மாயை எம் வசம் இருப்பதால் அதனை வைத்துக் கொண்டு அம்மனதின் தேவையை அவரவர் வினைப்படி ஆட்டி வைக்கமுடியும்.

பக்தன்:— என் ஸ்வாமி! உன்னிடம் மாயை இல்லையானால் இந்த மனதை நீ ஆட்டி வைக்க முடியாதென்று சொல்கிறாய்?

ஸ்ரீபகவான்:— ஆமாம் குழந்தாய்! ஆனால் ஒரு விஷயம் இந்த மாயைக்கும் மனதிற்கும் ஓர் வித்யாசம் உண்டு! மாயையின் குழந்தையே மனம். ஆனால் மாயை எம் வசம் உள்ளது; மனதின் வசம் இச்ஜீவர்கள் உள்ளார்கள்.



உ

மாயை வசம் இந்த மனதை ஒப்படைத்து விட்டால் அவ்வியம் மனம் செயலற்றுப் போகும். அப்படி மாயைவசம் ஒப்படைப்பதென்பது எந்த ஒரு காரியங்களையும் அதுமாதிரி ஆராய்ச்சி செய்யாமல் "நடந்தால் வரும் லாபமும்." "நடக்காவிட்டால் வரும் இழப்பும்"

"நமக்கில்லையென" சலிக்காமல் மனம் இருக்கப் பழகிக் கொண்டால் "அந்த மனதை மாயையிடம் விட்டுவிட்டோம் என்றாகிவிடும். அங்கு இது ஏன்? இதெப்படி? இது எதற்கு" ஓர் சலிப்பின்(றி அதை விண்) நிலையில் கேள்வி வந்தால் அது மாயையிடம் இந்த மனதை ஒப்படைத்ததாகாது!

பக்தன்:— இந்த அறியாமையின் ஜீவர்கள் இப்படி மதிமயங்க காரணம் என்ன?

ஸ்ரீபகவான்:— உன்னுடைய ஸ்ரீகுருதேவர் சொன்னபடி "நான், என்னால் என்னுடையது" இம் மூன்றையும் விடாத்தன்மைதான்.

பக்தன்:— இது ஒன்றும் பெரிய காரிய மாகத் தெரியவில்லையே. அனைவருமே உலகம் நிலையாமை அனைத்தும் மாயை எனத் தெரிந்தவர்களே. நீதான் அனைவருக்கும் "விளையாடத்தான்" உரிமை கொடுக்கிறாயே அப்போ தாதா? ஏன் உரிமை கொண்டாட வேண்டும்.

ஸ்ரீபகவான்:— எல்லோரும் அந்த மெய்யுணர்வுடன் கூடி அதுவாகி விட்டால் ரஸனையான உலகமே இல்லாமல் போய் விடுமே? இந்த உலக ரஸனைக்காக இந்த மாயை உண்டு பண்ணிய மனம் தேவைப்படுகிறது. இம்மனமில்லையானால் இவ்வுலகம் இல்லை. அது தேவையுமில்லை. இது ஓர் விளையாட்டு தானே!

பக்தன்:— ஆமாம் கண்ணா! உணர்ந்தவர்களுக்கு விளையாட்டுதான் மனதின் வசப்பட்டவர்களுக்கு சோதனையும் வேதனையும் தானே! ஆமாம் நீதான் அனைத்தையும் இச்ஜீவர்கள் நிமித்தமாக உண்டு பண்ணியே அதெப்படி வினையின் சிக்கலில் மாட்டிக் கொண்டு

ஸ்ரீபகவான்:— இது மனதின் வேகம் அதாவது தேவையும் ஆசையும் ஒன்றோடொன்று இன்றி விளையாடுவது ஜீவர்கள் படும் இரண்டு தோற்றம். "ஆசையென்றால் மனம்" அதை ஆக்கிரமிக்கச் செய்யும் "தேவையென்றால் உலகம்" தேவை எனும் மாயா சிருஷ்டி. ஆசை அவர்கள் மாயா மனம். நீ இருப்பதைப் போன்று அவர்களும் இருக்கலாம். மனதையும் தேவைகளையும் என் வசம் விட்டுவிட்டால் அவர்களும் அமைதியும் ஆனந்தமும் பெறலாம்.

உ



பக்தன்:- அந்த மனதை ஜீவர்களும் உன்னைப் போல் ஏன் கைவசப்படுத்த முடியவில்லை?

ஸ்ரீபகவான்:- குழந்தாய்! மாயை என்பது நாட்டிற்கும் ஜனத்தொகைக்கும் காரணமான சாட்சியாக இருக்கிறது. ஆனால் மனமோ நாட்டிற்கும் ஜனத்துக்கும் இயங்கும் காரியமாக இருக்கிறது.

பக்தன்:- ஓகோ அப்படியானால் மனதின் காரியத்தை விட்டால் மனமெனும் சிறையும். அதனால் மனதின் செயல்பாடும் அற்றுப் போகும். அந்த மனம் இல்லாத் தன்மையை பெற்று விடலாம். இதற்கு அதாவது காரியங்களை மறப்பதற்கும், அந்த மனதின் செயல்களை இழப்பதற்கும் என்ன மார்க்கம்?

ஸ்ரீபகவான்:- வேறு எக்காரண காரியமும் இல்லவே இல்லை. முழுமையாக காரியம் அனைத்தும் இறைவன் (மாயையின்) செயல் என நிர்மலமாக விடுவதைத் தவிர வேறு மார்க்கம் இல்லை!

பக்தன்:- எம் இறைவா! ஹே பிரபோ! உனக்கு வியாபாரத்தில் சலிப்பு மற்றும் உபாதைகள் இல்லாவிட்டாலும் உன் மாயையின் தொழிலும் உன்னுடையது தானே?

ஸ்ரீபகவான்:- அதுதான் இல்லை. ஸ்விட்சைப் போட்டதும் மிக்ஸி, கிரைண்டர், T.V. ஓடுவது போல அனைத்தும் தன்படியே ஓடும். இதில் ஒரு ரகசியம் என்னவென்றால் "ஓர் ஜீவனின் தூல ஜனனத்தில் ஸ்விட்சை போடுகிறேன். அப்புறம் அவன் "தூலமரணத்தில் ஸ்விட்சை ஆஃப் பண்ணி விடுகிறேன்." இதன் இடையே எது நடந்தாலும் "வேலியின் கூடுதல் குறைதல்" அனைத்தும் "மனம் படைத்த இந்த மனிதனின் பொறுப்பே."

பக்தன்:- எம் இறைவா! இது எப்படி சாத்தியமாகும்?

ஸ்ரீபகவான்:- எம் அன்பே! இந்த மனம் படைத்த மனிதன் தான் அனைத்துக்கும் பொறுப்பாகி விடுகிறான்.

பக்தன்:- அப்படியானால் அவனுக்கு விடுதலை எப்படி கிடைக்கும்?

ஸ்ரீபகவான்:- அவன் எந்த நொடி இந்த மனதால் விடுகிறானோ அந்த நொடியே அவனுக்கு விடுதலை அப்பொழுதே! ஆதலால் நீயோ பரிபூரணமாக தூலத்தை (வினையை) எம்மிடம் விட்டு விட்டாய். அங்கு எம் மாயை உன் தூலவினையை செய்து முடித்து விட்டு உன்னை செயலற்றதாக்கி விட்டது. உன் மனதை உன் குருதேவரிடம் விட்டு விட்டாய். அவர் அதை இல்லாமல் செய்து விட்டார். நீ சும்மா சுகமாக இருக்கிறாய்.



உ

பக்தன்:- எம்போன்று நீயும் சும்மா சுகமாக இருக்க முடியாதா?

ஸ்ரீபகவன்:- அந்த ஒன்று நான் முடியாது. ஆதலால் யாம் எந்நிலையிலும் ஆனந்தபரனாகவே இருக்கிறோம். மாயையின் இயக்கத்திரல் யாம் செயல்படுவதைப் போல் தோற்றும். ஆதல் உன்போன்று எம் நாவம் இல்லையே? உன் பக்தி இரக்கம் அலையும் கூடிந்தாலும் முடியா விட்டாலும் நீ ஜீவன் முக்தனே. யாம் ஒரு சதுர்யுகம் முடிந்தால் தான் எமக்கு முக்தி. அதாவது அந்த பரத் தொடுக்கவக்க முடியும்.

பக்தன்:- இப்போது உன் நிலையிலும் நீ பரமாத்மாதானே?

ஸ்ரீபகவான்:- யாம் பரமாக இருந்தாலும் "மாயா இயக்கம்" என ஒன்றிருக்கிறதே, அதை விட்டால்தானே யாம் பரம் என்றும் பூரணம் என்றும் சொல்ல முடியும்!

பக்தன்:- சரி! உன் காரியத்தை காரணமாக இருந்து கொண்டு பார்.

யாம் மகா காரணமாக (பரமாக) இருக்கிறோம்.

குழந்தாய்!

"ஸத்சித் ஆனந்தா! இங்கு உறையாடிய இரண்டையும் காணோம் அங்கு ஒன்று தான் இருக்கிறது அதுவும் இல்லை என்றே ஆகிவிட்டது. எப்படியென்றால்?

"இரண்டென்றேன்" "இரண்டும் ஒன்றென்றேன்"

"ஒன்றென்றும் இல்லை யென்றேன்!"

**"உணர்வு தெரியலையே"!!!**

ஜீவாத்மா பரமாத்மா என இரண்டானது!

அவ்விரண்டும் ஒன்றுகி பரம்பொருள் என்று ஒன்றானது!

அதுவும் இல்லையென்ற பராபரம் ஆகிவிட்டது!

அதுநாம ரூபம் குணம் குறிகடந்த நிலையாகிவிட்டதால் அதை

**சொல்வாரும் இல்லை! கொள்வாரும் இல்லை!**

அப்படியானால் அங்கு உணர்வு தானேது?

**அது சுகம்!!**



# ௫. கேள்வி பதில்"!

ஓர் கேள்வி:— இறைவனையும் குருவையும் ஒன்று எனச் சொல்கிறீர்கள்! இறைவன் செயலை குரு செய்யமாட்டார் என்றும்; குருசெயலை இறைவன் செய்ய முடியாது எனவும் சொல்கிறீர்கள். இறைவனின் செயல், ஜீவ ரட்சிப்பு என்றும்; குருவின் செயல், ஜீவ அழிப்பு என்றும்; சொல்கிறீர்கள். இறைவனும் குருவும் ஒன்று என, உணர்வு பெற்றபின் இறைவனையும், குருவையும், தனித்தனியே உணர முடியவில்லையே.



உ

எம் அனுபவத்தில், இறைவன் நாமாவோ, இறைவன் செயலோ, நிலைக்க வில்லையே! எந்த விடியும், ஸத்குரு சொரூபம் மட்டும் தோன்றுகிறது. ஸத்குருநாமாவும் இடையறாது இருக்கிறதே! அப்படியானால் இது தெய்வ நிந்தனை ஆகுமோ? உடல் உலகுக்கு தெய்வம் என்றும், ஆன்ம உணர்வுக்குக் குரு என்றும், தாங்கள் சொல்லும் கருத்தை, யாம் எப்படி ஏற்பது? உணவு, உடை, இருப்பிடம் இவைகளை, இறைவன்தான் தரமுடியும் என்றால், இறை நாமா எமக்கு ஏன் வர மறுக்கிறது? அவைகளை குருநாமா தர இயலாதா? தாங்கள் இறை நாமாவை, வலியுறுத்தி சொல்லும் போது, அதை எம்மால் ஏற்க முடிய வில்லையே! காரணம் என்ன? இந்த சந்தேகங்களுக்கு, சற்று விளக்கம் கொடுத்தால், அனைவர்க்கும் பிரயோஜனமாக இருக்கும்?

குரு:— குழந்தாய்! இது நல்ல கேள்வியே! யாம் ஓர் சிறிய விளக்கம் தருகிறோம். அதில் நீ எந்த நிலையில் இருக்கிறாய், என மட்டும் சொல்வாயாக?

சிஷ்யன்:— ஐயா! தாங்கள் சித்தம்! எம் பாக்கியம்!!

குரு:— குழந்தாய்! தெய்வமும் குருவும் ஒன்றானாலும், யாம் கூறும் நிலையில், இரண்டாக செயல் படுவதால், அவை இரண்டும் ஒன்றா? இரண்டா??

சிஷ்யன்:— எம் அனுபவத்தில், ஓர் நாணயத்தின் இரு பக்கங்களே, குருவும் தெய்வமும்! நாணயம் ஒன்றே. என்ற



உ

நிலையில் குருவும் தெய்வமும் ஒன்றே!

இருபக்கமும், "சின்னம்" மாறுபடுவதால் (செயல் வேறுபடுவதால்) அது இரண்டு என்பது வாக்கியார்த்தமே தவிர, லட்சியார்த்தம் இவ்வலை இல்லை.

குரு: (1) அப்படியானால், ஒருவர் காரியத்தை ஒருவர் செய்ய முடியாது என்பது அனுபவமானால், உன் எதிரே தோன்றுகின்ற படமோ பொம்மையோ (விக்ரஹங்களோ) உனக்கு ஸத்தியமாகவும், இருப்புடையதாகவும், உன் தேவையை பூர்த்தி செய்வதாகவும், "நம்பிக்கை" இருந்தால், அது அதை நம்பியே ஆகவேண்டும். இங்கு துவைதமே! ஸ்ரீபகவன் நாமஸ்மரணையும், அதன் தோற்றமும் அவஸ்யம் நீ ஏற்றே ஆகவேண்டும்! அதுவே அந்த நேரம் ஸத்தியமாகும்.

(2) மாறாக உன் தேவைகளும், நடக்க வேண்டியவைகளும், "இயற்கையாகவே" அதாவது இது தாவத்தின் "வினை"! "மனம்"! "ஈசு" (இறைவன்) இவைகளின்படி, தானே நடைபெறுகிறது என்ற, திட உணர்வு உனக்கு இருந்து, தவக்கம், மயக்கம், பயம், சந்தேகம் இல்லாமல், மேலே சொன்ன படங்களோ, பொம்மைகளோ



"**உன் வகையில்**" தேவை இல்லையென்பதை உணர். காரணம் அனைத்தையும் "**சமமாக**" காணவும் ஏற்கவும், மனம் பக்குவப் பட்ட தன்மையினால், இது விசிஷ்டாத்வைத நிலையில், உன் மனம் நிலைத்ததை உணர்வாயாக!

③ அதீதமான நிலையில், அனைத்தும் படக்காட்சி, அல்லது பொம்மலாட்டம் என்ற நிலையில். பார்ப்பது, கேட்பது, தொடுவது, இதுபற்றி "**பேசுவது**" இவைகளில் உனக்கு "**நாமரூபகுணதோஷம்**" தோற்றமில் இருந்தால், இது உன் அனுபவ அத்வைதமாகும். இங்கு தேவ தெய்வ மாயா நிலை, உனக்குள் அடங்கி அழிந்து விட்ட தன்மையினால், இறை "**சொரூபமோ**", அதன் "**நாமாவோ**" உன்னிடம் இராது! இதுவே "**குரு சொரூப**" நிலையாகும். இங்கு இறைநாமாவை நீ உச்சரிக்கவும் முடியாது. குருதேவா என்ற ஸத்குரு ஸ்மரணை ஒன்றே இலக்காவும் இருக்கும்.



சிஷ்யன் :— ஐயா! நாங்கள் சொல்லும் அனுபவ நிலையில், மூன்றாவது நிலையில் இன்னமும், "அனுபவம்" பெறவில்லை

நான். ஆனாலும், இரண்டாவது நிலையில், இப்போதுதான் வினை, மனம், விதி இவைகளின் அனுபவம் பெற்று, அதன் "சுவையை" இப்போதுதான் சுவைக்க ஆரம்பித்திருக்கிறேம். ஆனால் அதில் "மூழ்கி" இன்னமும் பெறவில்லை நான். இருப்பினும், இறை சொரூபமும் இறைநாமாவும் வரமறுக்கிறதா? இயல்பாக இல்லையா? என்பதும் எமக்குத் தெரியவில்லை. ஆனால் குருநாமஸ்மரணை இடையறாது இருக்கிறது! இது சரியான பாதையா? அல்லது தவறான பாதையா?

குரு :— இது சரியான பாதையென்றே எமக்கு தோன்றுகிறது. ஒர் பக்குவ ஆன்மா முன் ஜன்மாவில், நாமரூப தெய்வத்திடம், முழுமையாக சரண்புகுந்து ஓர் நிலைப்பாட்டில், ஒர் சிறிய "கடுமாற்றத்தால்" இச்ஜன்மா எடுத்திருப்பானாயின், அவனுக்கு உபாசனை மூர்த்தியோ அதன் நாமரூபமோ, அவசியம் தேவையில்லையென ஸ்ரீ மஹான்களின் அனுபவமாகி இருக்கிறது!



இதை ஸ்ரீமஹான்கள், எப்படி சொல்கிறார்கள்
என்றால்? இதை "விட்டுறை"
என்றும், அதை "தொட்டுநில்"
ரூப என்றும் ரகஸ்யமாக சொன்னார்கள்.
அதாவது "நாம" ஜகத், ஜீவ, ஈஸ்வராதிகளை முழுமை
யாக விடவில்லையானால் அடுத்த ஜன்மாவில், அவைகளை முழுமை
யாக, "விடும்நிலை"க்கு பாடம் நடைபெறும் என்றும்;
நாமே அது, அதுவே நாம் என்ற நிலையில், பரசொரூபஸ்திதியை
முழுமையாக, "தொடும்நிலை"க்காக, அனுபவநிலையில்
பாடம் நடக்க, வந்ததாகும் என்றும், ஆகவே அந்த நாம
ரூப தேவ தெய்வ நாமாவை நடக்க முடியாதென்றும், "அது"
ஆகும் நிலைக்கு "ஸத்குரு" சொரூபத்தை மட்டும் நாடி வந்திருக்
கிறது என்றும், பொருள் கொள்ள வேண்டும். இங்கு யாம்
குருசொரூபம் "நாமரூபமாக"!!!!
ஷீர்டிபாபா என்றோ, சாயிபாபா என்றோ, சாயிராம் என்றோ,
சிருடிபாபா என்றோ, ரமண குருவே என்றோ வேறு எந்த "குரு
சொரூபத்தையும்" சார்ந்ததல்ல/
(சார வேண்டாம்)



மேலும் ↑ அப்படி குரு சொரூபத்தை சார்ந்து நிற்குமாயின், அது தோன்றி, இருந்து மாறி மறைக்கூடியதே, அது சாஸ்வதமுமல்ல! அது ஸத்தியமுமல்ல!

யாம் முன்பு கூறியபடி, "குரு" என்றால் "ஒலி. ஒளி" ஆகும். அது பர ஒலி ஆகும். அது ஆத்ம ஒளியாகும். அது "அனுபவஞானத்தை" வாக்கியார்த்த நிலையில், "ஒலி"யாக கொடுத்து, லட்சியார்த்த நிலையில், "ஒளி"யாக ஸ்வயமாக ஆக்கும் நிலையாகும்! மேலும் இதை "வரி" வடிவிலோ, "வாக்கு" நிலையிலோ, எவரும் விளக்க முடியாது.

சிஷ்யன் :- ஐயா! இங்கு தெய்வ நாமாவை ஸ்மரிக்காமலும், தெய்வ சொரூபத்தை நோக்காமலும், பிராப்தாதீனமாக, உணவு, உடை, இருப்பிடம், இவைகளை ஏற்பதனால், அது தவறாக, அதாவது அபசாரமாக மாறிவிடாதே? என்றால் தாங்கள் அடிக்கடி, ஸத்ஸங்க உரையாடலில், அவன் (இறைவன்) நாமாவை சொல்லாமல், அவனை எண்ணாமல், எதை எடுத்தாலும், எதை கொடுத்தாலும்,



இ அது தோஷமே என்றும், அது வினைத் தொடர்பை, உண்டு பண்ணும் என்றும், சொல்லி வருவதால், இதைக் கேட்கிறேன்.

குரு :— தெரிந்தாய்! இங்கு பயம் கலக்கம், சந்தேகம், வேண்டாம். உன் "பிராரப்தத்தை!" இறைவன் (இயற்கை) தந்ததே ஆக வேண்டும். ஆனால் "ஆகாமியம்!" தொடருமாயின், அவ்வினைக்கு பொறுப்பு "உண்மையே!" இங்கு நீயோ, "வினை மனம் விதி" இவைகளை உணர்ந்து, செயல்படுவதால், தொடர்வினை இல்லையென்றே சொல்லுவோம்!

சிஷ்யன் :— தாங்கள் வாசகப்படி, இறைவனும் குருவும், ஓர் நாணயத்தின் இருபக்கங்கள் எனத் தோற்றும் போது, அது "சமபாவனை!" யென ஆகிறதே! இங்கு எதை வைத்து சின்னங்கள் எனக் குறிப்பிடுகிறீர்கள்?

குரு :— உன் வகையில், இது விசிஷ்டாத்வைதம் என்றேன். முதல்நிலை (பேதம்) துவைதம் என்றேன். இவ்விருநிலைகளுக்கும் "மனமும்!" உண்டு! அம்மனமே கற்பனையான, "புண்ணியபாபம்!" என்றும்; "ஸத்ய தர்மமென்றும்!" பேசப்படுகிறது. இது உலகியலுக்கும், தெய்வீக நிலைக்கும் பொருந்தும். ஆனால்? மனதின் செயலாகிய, இவ்விரண்டும் சின்னங்களாகும்.



மூன்றுவது நிலையாகிய "பரமார்த்தகத்தில்" (அத்வைதத்தில்) இவை இரண்டும் இல்லாமல் மறைந்து விடும்.

சிஷ்யன்:- மறைந்து விடும் என்றால், எது எதில் மறையும்? எதுவதில் மறைந்ததோ அது உண்டு தானே? அதை யெப்படி இல்லையென சொல்ல முடியும்?

குரு:- குழந்தாய்! மேலே கூறிய மூன்று நிலைகளும் (துவைதம், விஷிஸ்டாத்வைதம், அத்வைதம் இவை முறையே லௌகீகம், தெய்வீகம், பரமார்த்திகம் ஆகிய இம்மூன்றும்) உண்டு என்றும், இல்லையென்றும், விவகாரிப்பது யார்?

சிஷ்யன்:- (ஆழ்ந்து சிந்தித்தான்) எம் மனமே!

குரு:- அம்மனம் மறைந்தாகி விட்டால், விகாரம் ஏது? விவகாரம் எப்படி நடைபெறும்? அங்கு நாம் நாமாகவே இருக்கும் போது, கேட்பவர் ஏது? பார்ப்பவர் ஏது? சொல்லிவிளக்குபவர் தான் ஏது?

சிஷ்யன்:- ஓர் சிறிய சந்தேகம். முன்பு விளக்கத்தில் குருநாமஸ்மரணையானது, ஓர் "நாமரூபத்தை" பற்றி இருக்கவாகாது என்றீர்கள். அந்த நாமரூபம் தானே "விளக்கமாகவும்" (ஒலியாகவும்) "விளக்காகவும்" (ஒளியாகவும்)



திகழ்கிறது. அப்படியானால் இங்கு குரு
சொரூபம் தேவையில்லை யென்பதை எப்படி
நிரூபிக்கிறீர்கள்? இப்போது தாங்களைப்
பார்த்துப் பேசி விளக்கம் கேட்பதால்தானே
பயன் பெறுகிறோம்? இத் தோற்றம் இல்லை
யாயின், நாங்கள் பயன் பெறுவது எப்படி??

குரு:— நல்ல விளக்கமான கேள்விதான்! இன்று நான்கு
யுகங்களிலும், தோன்றிய கோடானுகோடி மஹான்களின்
தூலம் இருக்கிறதா?

சிஷ்யன்:— இல்லைதான்! ஆனாலும் அவர்கள் வாக்கு
இருக்கிறதே!

குரு:— அந்த வாக்கை நீ கேட்டாயா? அல்லது படித்தாயா?

சிஷ்யன்:— தாங்களைப் போன்ற ஸ்ரீ மஹான்கள் வாயிலாக,
"வம்ஸ வழிவழியாக" கேட்டும் வந்திருக்கிறோம். ஏடுகள்
கல்வெட்டுகள் மூலமாக, வரிவடிவமாக வம்ஸ வழிவழியாக
படித்தும் வந்திருக்கிறோம்!

குரு:— நன்றாக விபரமாகத்தான் சொல்கிறாய்! - ஆனால்
முந்தைய காலங்களில், ஏடோ கல்வெட்டோ, அதன்
"ஸாதன பொருள்கள்" இல்லையென்றே
சொல்வோம். அது அவர்களுக்குத் தேவையும் இல்லை. ஆனால்
வாக்கின் நிலையில், "ஒலிவடிவமாக" வே,
இயங்கப்பட்டு வந்தது. இன்றும் அதை கேட்டுணரவும் முடியும்.
அந்த ஒலி வடிவம் பர சொரூபமாகும். அதை வெளியிட்டது
ஸ்ரீமஹான்கள் என்ற பதுமைகளாகும் (ஒலிபெருக்கியாகும்).



ஓ

குரு:— இங்கு பதுமைகள் முக்கியமா? ஒலி முக்கியமா? எனக் கேட்டால், ஒலி பெருக்கி என்ற பதுமை இல்லாமல், ஒலி எப்படி வரும் என எதிர் கேள்வி கேட்பாய். அது அவசியம் தான். இப்போது சிந்தித்து, அறிவூன்றி பதில் சொல்வாயாக. உன்னை இந்த நிலைக்கு அறிவு பிரகாசிக்கச் செய்தது, "ஒலிவடிவமா?" "பதுமைவடிவமா?"

சிஷ்யன்:— ஒலிவடிவமே! ஆனால் அப்பதுமை இல்லாமல் ஒலி வராதே! ஆகவே பதுமையே முதலிடம் பெறுகிறது. ஒலி வடிவம், இரண்டாவது இடம் தானே பெறுகிறது?

குரு:— உண்மைதான்! உன் வழியிலேயே பார். அன்று வந்த பரிமாணங்களின் பதுமைகள், "கோடானு கோடி" "நாமரூபமாகும்!" ஆனால் அவர்களின் "ஸ்வயஞானபவம்" (ஆழ்ந்த கருத்து) "ஒன்றுதானே?" "இரண்டில்லையே!!?"

சிஷ்யன்:— (ஆழ்ந்து சிந்தித்தான்) ஆமாம் ஐயா! ஒன்றுதான். இரண்டு இல்லவே இல்லை!

குரு:— அப்படியானால், எவரெவர் வாக்குகளிலிருந்தெல்லாம் அவ்வொலி வந்ததோ, அவர்களை யெல்லாம் நீ சொல்லவோ, வாழ்த்துக் கூறவோ, எண்ணவோ வேண்டாமா? அது உன்னால் முடியுமா?



சிஷ்யன்:- ஐயா! முடியாதுதான். ஆனாலும் தற்சமயம், எம்மைக் கடைத்தேற்ற வந்த குரு சொரூபத்தை, எண்ணி ஸ்மரித்தால், அனைவரையும் ஸ்மரித்த தியானமாகாதா? நாங்களும் முன்பொரு சமயம் சத்சங்கத்தில் உரையாற்றும் போது, இறைவா, என்றோ கடவுளே என்றோ அழைக்கவேண்டாம் என்றும்; ஏதாவது ஓர் நாமரூபத்தோடு அழையுங்கள், என சொன்னதுண்டு. அப்படி இருக்கும் போது, நாங்களும் எங்களை, கடைத்தேற்ற வந்த குருபெருமானை, அவருக்குத் த நாமரூபத்தை சொல்லி, அழைப்பதுவோ, போற்றுவதோ, புகழ்வதுவோ, ஏன் கூடாது என்கிறீர்கள்?

குரு:- குழந்தாய்! தேவதெய்வங்கள், மாயாமனதின், கற்பனை சொரூபங்களாகும். மஹான்கள் அப்படி அல்ல. நம்மோடு வாழ்ந்த; வாழும்; ஸத்திய சொரூபம் ஆகும். இதைகவனி. யுகயுகமாக வாழ்ந்து, தம் அனுபவ நியதியால், போதித்த ஸ்ரீமஹான்களின் வாக்கை, இன்று தற்காலிகமாக நம்மோடு வாழும் மஹான்களின் வாக்காக பயன்படுத்தினால், அது தவறாக படுகிறதா? சரியாகபடுகிறதா?

சிஷ்யன்:- ஆமாம் அது தவறாகத்தான் படுகிறது. ஆனால் இன்று நாங்கள் கொடுத்த விளக்கம், அதி அதி முக்கியமானதுதான். உலகபழமொழியில், ஒன்று சொல்வதுண்டு. தாயும் பிள்ளையும் ஒன்றாக தோன்றினும், வாயும் வயிறும் வேறு வேறுதான் என்பார்கள்.



அது போல
↑ஸ்ரீமஹான்களின் வாக்கு ஒன்றாயினும்,
"வீணாப்போகம்!" என்ற
தூவம் வேறு வேறுதான். ஆனாலும் பிறவிப்
பிணியை, அறுத்தெறிந்த, நம் ஸத்குரு
தேவரை, அவருக்குரிய "நாமாவைச்"
சொல்லி, போற்றாமல் இருந்தால், அது பெரிய தவறாகப்
படுகிறதே, என் செய்வோம்? அது அபசாரமாகவும் படுகிறதே!

குரு:- உண்மைதான். ஆனாலும் இந்த உண்மையையும்
மறக்கவாகாது. இதைமட்டும் உணரவும்!
எந்த ஸ்ரீமஹான்களின் "நாமாவை"யும்
ஸ்மரிக்காமல், எந்த விதையும்,
"குருதேவா" என்றோ, "குருநாதா" என்றோ,
இப்படி "குருநாம ஸ்மரணையுடன்"!
அழைத்தால், அது முந்தையவுக அனைத்து ஸ்ரீமஹான்
இன்றைய ஸ்ரீமஹான்களையும்,
களையும் ↑அழைப்பதும், போற்றுவதும் ஆகிவிடுமே!
உனக்கும் அமைதியும், சாந்தியும் தானே பெருகும்!

உண்மையை உணரும் ஒர்மித்த அறிவும் பிரகாசிக்கும்!
~~ஸத்குருநாதா! ஸத்ய சொரூபா! ஆனந்த சொரூபா! எனவும்~~
குருதேவா என்ற ஸ்மரணையில் ஏராளம் உண்டு. அப்படி அவர்களை குறி
யாமல் "பாமாக" அழைத்தால் தோஷமில்லை.



உ

மேலும் ஸத்குரு சொரூபம் "ஒன்று மட்டும், பரசொரூபமாக"!
விளங்குவதால் அங்கு எந்த நாமரூபமும்
பெறமுடியாது! பெறக்கூடாது! அப்படி நாமரூபம்
தாங்கிய ஓர் ஸத்குருவை வாழ்த்தினாலும், புகழ்ந்தாலும்
அது அபசாரம் ஆகும்! ஆனால் "சாமான்ய
குருமார்களை"! வாழ்த்தினாலும், புகழ்ந்தாலும்
அது பொருந்தும். அது அபசாரமும் ஆகாது! அவர்கள்
உலக ஜீவர்களை, பவசாகரத்திலிருந்து, "உஜ்ஜீ
வித்து, தெய்வீகமாகவே!"
பிரகாசிக்கச் செய்த, மஹானுபாவர்களாகும். அவர்கள்
இல்லையானால், கலியில் இந்த ஜீவர்கள் உய்ய முடியாது!
ஆனால் ஜீவன் முக்தி நிலைக்கு, "கைகாட்டி
களாக இருக்கும், ஸத்குருவுக்கு பேர், புகழ், பட்டம் பதவி
இவைகள் இருக்க முடியாது! இருக்கவும் கூடாது!
காரணம்; அந்த ஒன்றே "நாமாதீத"மானதே!
"நாமரூபகுணங்குணா காலதேச



"வர்த்தமானம்" (வியாபாரம்) கடந்ததொன்றாகும். அதை உணர வைக்கும், "ஸத்குருவும்" அதன் அம்ஸமாகவே இருந்தால்தான், வழிகாட்டியாக இருந்து கைகாட்டி ஆகமுடியும்.

சிஷ்யன்:- ஐயா! கைகாட்டிக்கும், வழிகாட்டிக்கும் உள்ள வித்தியாசம் என்ன? ஆனாலும் முன்பு ஒரு மடலில், கோடிட்டு காட்டியிருந்தீர்கள். ஆனால் இப்போது, அதிக வலியுறுத்தி சொல்வதால், அதில் முக்கியமான ரகஸ்யம், இருப்பதாக உணர்கிறேன். தயை செய்து பதில், வெகு எளிமையாகவும், இனிமையாகவும், வர வேண்டுமென பணிந்து வேண்டுகிறேன்.

குரு:- குழந்தாய்! வழிகாட்டியே கைகாட்டி ஆவார். ஆனால் கைகாட்டி வழிகாட்டி ஆகார். ஆகமுடியாது.

வழிகாட்டி யென்பவர், நம் ஸ்ரீ மஹான்களால் உணர்ந்தும் காலாதீத பரசொரூபத்தால் "பரகுரு" என்ற நிலையில், உணர்த்தப்பட்டும்; பரசொரூபஸ்திதி ஒன்றை "அத்வைதத்தை" மட்டும் தம் ஸ்வய



உ

அநுபவ நிலையில், (வாய் ஞானமில்லாமல் தம் அநுபவ ஞானமாக) "பணிவும் கனிவும், கருணையும்"! இணைந்த நிலையில், "கண்டிப்பும்";

"கண்டிப்பும்"! இல்லாமல் தம்மையே, முழுமையாக அர்ப்பணித்த நிலையில், தம் போதனையையே "சாதனையாக்கி"! தம் நிலைக்கு கொண்டு வராமல் (ஓர் குரு ஆகாமல்) "ஜீவன் முக்தன்"! நிலைக்கு ஆக்குபவரே ஸத்குருவும் ஆகும். "வழிகாட்டி"யும் ஆகுமே!

இப்படி வழிகாட்டியாக இருக்கக் கூடிய ஸத்குருதேவரே, "அதுவே. நீயே அது"! என்ற பிரம்ம ஞான சபைக்கு (அயமான்மா பிரம்மம்) என்ற மஹா வாக்கிய, ஜீவன் முக்தன் லக்ஷணத்தில், தாம் "மௌனமாகவே"! இருந்து கொண்டு,



உ

அவர் வழி வந்த, அந்த சத்சிஷ்யனை

கரை ஏற்றும், ஓர் ஓடமாகவோ,

பரண் ஏற்றும், ஓர் ஏணியாகவோ,

"தன்மை அர்ப்பணித்து" தன்மை

யிழல், "ஜடஸொரூப" காட்சியிலும்,

"பரஸொரூப" ஆத்மப் பிரகாசத்திலும்,

"சொல்லாமல் சொல்லி"

"உணர்த்தாமல் உணர்த்தி"

அதுவென அவனை ஆக்கி, அவனுள் தான் கலந்துவிடுவார்.

இது மௌனமான ஓர் ரகஸ்யமாகும்

இதுவே "கைகாட்டி" யின் நிலையாகும்.

இதற்குமேலும் இக்கைகாட்டியை, விளக்கவோ, சொல்லவோ, எழுதவோ, உணர்த்தவோ, எவராலும் முடியாது. அந்த அனுபவம் தமக்கு ஸ்வயமாக ஆகும்போது தாமே உணர முடியும், உன் அனுபவத்தால் முடியும்!



உ

மேலும் குருதேவா என்றோ, குருநாதா என்றோ, ஒர்மித்த மனதுடன், உருக்கமாக அழைத்தால் அவசியம் "இருள் அகலும்" ஆத்ம ஒளி பிரகாசிக்கும். இது ஐபைத்தியேத்தின் ஸ்வய அனுபவமாகும். எப்படி என்றால்?

"கு" என்றால் "ஒலி & ஒளி" என்றோம். அதாவது?

"அறிவு" சொரூபமான ஒலியை கொடுத்து, அறியாமை என்ற, அதாவது அஞ்ஞானம் என்ற, அதாவது "நம் கவனக் குறைவால்" வந்த மன இருள் அகற்றி, நாம் அழிவற்ற ஆத்ம சொரூபமே என்ற "ஞான" தீபத்தை ஏற்றுவதாகும்.

குருதேவா என்பதற்கு பதிலாக, தற்காலிக குரு நாமாவை சொன்னால், அதனால் இருக்கும் பாரியந்தகம், பலன்களும் அப்படியும் நிரந்தரமும் அல்ல! சாஸ்வதமும் அல்ல! "தற்காலிக" நிவர்த்தியாகும்

ஆனால்???



"குருதேவா! குருநாதா!" என்றால் அது அர்த்தமானதாகும். காரணம்? "அத்வைதஸத்குரு!" "ஒருவரே பராசொப!" அம்ஸம் பெற்றவராவர். அவர் வாக்கும், "பர ஒலி" ஆகும். ஆதல் இங்கு வாக்கியார்த்த சிரத்தா "சேவையே!" முதலிடம் பெறுகிறது. "தாஸசேவை!" இரண்டாவது இடம் பெறுகிறது. இங்கு ஸத்குரு இருநிலைகளில் "மறைபொருளாக!" (இறைசொரூபமாகவும், குருசொரூபமாகவும்) செயல் படுவதால், குருதேவருடைய வாக்கிய சேவையே, "ஸத்சிஷ்யனுடைய!" பிராரப்த வினைகளை, அவனது அனுபவநிலையில், வெய்யிலின் மஞ்சள் என மறையச் செய்தும், அஞ்ஞான இருளை (கவனக்குறைவு) அகற்றியும், அவனை ஜீவன் முக்தன் என ஆக்கிவிடுகிறது. ஆகவே பஞ்சீகிர்தம் பண்ணப் பட்ட தாவநாமாவைவிட "குருதேவா!"



"குருநாதா" என்ற பரசொரூபே
"நாமஞான ஒலியே"
சிறந்தது என முக்காலங்களிலும்,
நமக்காகவே
வாழ்ந்து, அனுபவத்தை உணர்த்திய, ஸ்ரீமஹான்களின் ஸ்வய அனுபவமாகும்!

சிஷ்யன்:- ஐயா! முன்பு ஓர் சமயம், ஸத்ஸங்க உரையாற்றலில் தாங்கள் வாசகம்:- ஸத்குரு, ஓர் அக்கினி ஜ்வாலை யென்றும்; அதன் அருகில் நெருங்கினால், பொசுக்கி விடும் என்றும், அதிகமாக விலகி நின்றால், பயன் இல்லை என்றும்; சமதூரத்தில் இருந்தால், பயனும் பலமும் உண்டென்றும் சொன்னீர்கள். அதன் விளக்கம், என்ன என்பதை, சற்று எங்கள் அறிவுக்கு, எட்டும் நிலையில் விளக்கினால், நலம் என எண்ணுகிறோம்???

குரு:- குழந்தாய்! இது பயன் உள்ள கேள்வியே! இதை கவனி:- ஸத்குரு என்பவர், ஞானாக்கினி எனப் பொருள் கொள்ள வேண்டும். அவருடைய வாக்கு, "ஸ்வயஞானானுபவம்"! ஆகும். அது வாய் ஞானமோ, சாஸ்திர ஞானமோ கேள்வி ஞானமோ, வல்லமை ஞானமோ அல்ல!



1. நெருங்கினால் ஆபத்து:- இங்கு நெருங்கினால் எனச் சொல்வது, தன்னுடைய காலக் கணக்கையும், தாம் பாடம் கேட்கும் கணக்கையும் நாம் எவ்வாறு தெரிந்து கொண்டோம் என்ற, "மனக்கணக்கையும்." குருதேவர் என்னையே அதிகம் நேசிக்கிறார், என்னிடமே பேசுகிறார், நானே "முதல் மாணவன் (மாணவி) தான் காப்பு" சக்தியில் என்ற நிலையில், இருந்தால், (அது அவன் சுயம்) அவன் சாதனையில் பலன் இல்லை

2. அதிகமாக விலகி நின்றால் பலன் இல்லை:- இங்கு "பிறர் மேலேயே" கவனம் செலுத்தி, அவர்களை கண்காணித்துக் கொண்டும், குற்றம் குறை பேதம், விருப்பு வெறுப்புகளுடன் கூடி, தன் சிரத்தை இல்லாமல் "முன் கவனம்" சக்தியுடன் கூடி தன்னையே இழந்தவராகும்! முன்பு கூறிய நிலையில், ஆகாமிய கர்மாவை நம் அறியாமையினால் (கவனக் குறைவினால்) சேர்க்கும் நிலையும், அதிகம் விலகி நிற்றல் ஆகும்!



3.

சம்சாரத்தில் இருந்தாலும் பலனும் பயனும் உண்டு.

இது "நற்கவலை சக்தி" ஆகும். குற்றம் குறை காணாமையும், வேதம் காணாமையும், விருப்பு வெறுப்பு கொள்ளாமையும், "ஆகாமியவினை" இல்லாமையும், "பிரக்ஞை" த யே ருது என்ற நிலையிலும்; ஸத்குருவாக்யமே "உபதேசம்" என்ற பிந்துவாகவும், அதனால் தாம் நமக்குள்ளேயே கருவுற்று "உணர்வுடன்" ஒன்றியிருக்கும் நிலையே, "கர்ப்பமாகவும்" அதனைத் தான் அடையும், "பிரம்மானந்தமே" (அதன் ஜீவன் முக்தி நிலையே) (தாம் பெற்ற குழந்தையாகவும்) ("சிசு" ஆகவும்)

எந்த உத்தம சீடன் பெறுகிறானோ அவனே ஸத்குருவாவார், சம்சாரத்தில் இருக்கப்பட்டு, பயனும் பலனும் பெற்ற ஜீவன்முக்தராகும் என, ஸ்ரீமஹான்களின் அனுபவமாகும்! எம்முடைய ஸ்ரீகுருதேவர் சொல்வார்: — ஸ்ரீமஹான்களின் அருகே மிக நெருக்கமாக செல்லாதே. அவர்களின் திருவடிகளை தொடவோ, அவர்கள் சரீரஸ்பரிசமோ கிடைக்க வேண்டுமென்று,



"பேராவல்" கொள்ளாதே என்றும்,
அவர்கள் திருஷ்டியில் படாமலும் நிற்காதே
என்றும், அவர்கள் பார்வையில் படும்படியாய்
"சமதூரமாகநில்" என்றும்,
உனக்கு எது தேவையோ, அதை "அது/அவர்"
ஸ்வயமாக, அவஸ்யம் கொடுக்கும் என்றும், ஸ்பரிஸ தீட்சை
யைவிட, "நயனதீட்சை" அதி அதி
சூட்சமம் என்றும், நயனதீட்சையை விட "மானஸ
தீட்சை" அதி அதி அதி சூட்சமமாகவும், ரகஸ்ய
மாகவும், உள்ளதென்றும், இதில் உன்னுடைய "மன
உருக்கமும்/ஏக்கமும்"தான்
மிக மிக மிக மிக மிக முக்கியம் என்றும், (உன்னுடைய அவஸ்யம்
மன உருக்கமும் ஏக்கமும்தான், அவர்கள் பார்வையை உன்மீது
படப்பண்ணும் என்றும், அதனால் உன்மனதை அவர்கள் ஏற்றுக்
கொண்டு, அம்மனதில் ஸ்வயமாக, இப்பக்குவ ஆன்மா நலம்
பெற வேண்டும், எனஎண்ண முடியும் என்றும்) உன்மனதை
அவர்கள் ஏற்றுக்கொண்ட தன்மையினால், அம்மனம் சுத்தி
கரிக்கப்பட்டு விடுகிறதென்றும்; உன்னை அறியாமலேயே,



உ

இக்காரியம், ஸ்ரீ பரம் பொருள் நம்முடைய ஸ்ரீமஹான்கள் "ஸத்குரு" ரூபமாக நடத்துவதால் இது பரமரகஸ்யம் என்னும், "ப்ரம்ம ரகஸ்யம்" ஆகும் எனவும் சொல்லி, ரமதார தர்ஸனத்தை மிகவும் சூட்சமாக சொன்னார்கள்.

மேலும் ஸ்ரீமஹான்களின் (ஸத்குருதேவரின்) ஸ்பரிசம் இயல்பாகவே (பாதபூஜையோ, பாதசேவையோ, அவர் "சிர; கர, சரண;" ஸ்பரிசமோ) கிடைத்தால், நம் கடும் வினையின் காரணமாக, அதை நிவாரணம் செய்வதற்காக, "வலிய" நடந்தாட் கொள்கிறது என உணர்க.

மேலே கூறிய நிலையில், "ஸ்பரிசம்" கிடைக்கவில்லையாயின், "கடும் கடும்" வினை நமக்கில்லையென ஆத்ம சாந்தியுடன், அமைதியுடனும் ஆனந்தமுடனும் இருக்கவும்.

அங்கு "வாக்கிய சிரத்தை" ஒன்றே போதும். உன் "நம்பிக்கையே" இருநிலைகளிலும் வேலை செய்கிறது என உணர்க!



உ

சிஷ்யன்:- ஐயா! பிரம்மானந்த சமுத்திரம் பற்றிய ஓர் முக்கியமான கேள்வி. நாம் ஆத்மாவே! நம் பரமாத்மா இறைவனும்! ஜீவாத்மாவாக, நம் மனத்தின் வடிவெடுத்த நாம் இறைகுருகிருபையினால், ஜீவகர்மங்களைப் பட்டு, ஆத்மாவாகிவிடுகிறோம். இத்ஜீவகர்மங்களைப் படுவதற்கு, குரு காட்டிய வழியில், கர்மயோகங்கள் பற்பல செய்து, ஜீவன் முக்தனாகி, சமுத்திர நிலையாகிய நாம், சமுத்திரத்தோடு கலந்து விட்டோம் என வைத்துக்கொள்ளுங்கள். ஆனால் ஆன்ம உணர்வோடு இல்லாத, பாமர மக்களும் "நம்முடைய ஆத்மாவே!" இது பிரமாணமான உண்மையாகும். அந்த பாமரமக்களாகிய அஞ்ஞானிகளும், திரும்ப திரும்ப பிறந்திறந்து, உழன்று தாங்கள் கூடும் மஹாப் பிரளய காலத்தில், எல்லாமே ஒன்றாகி அந்த பிரம்மானந்த சமுத்திரத்தில் கலந்து விடும் என்றால்?

1. நாம் சாதனை ஏன் செய்ய வேண்டும்?
2. நாமும் அவர்களைப் போல் கூட்டத்தோடு கோவிந்தா! என்பது போல், கலந்து விடலாமல்லவா?
3. செயலற்ற பிரம்மானந்த சமுத்திரத்தை விட! செயலுற்ற ஈஸ்வரர்களுடைய, பரமபதம் (பதமுக்தி) பேரானந்தமாக இருக்குமே! அதை ஏன் வேண்டாம் என்கிறீர்கள்?
4. நாம் நம் சாதகர்களால், பிரம்மானந்த சமுத்திரத்தில் கலந்து விட்டால், மஹாப் பிரளய காலத்தில் தனி காவிக அஞ்ஞான ஜீவர்களும், நம்மோடு தானே



உ

சேர்ந்து விடுவார்கள்? அந்த புது யுகத்திற்கு,
நாமும் திரும்ப திருஷ்டிக்கு, (ஜீவனாக) வர
மாட்டோம் என்பதற்கு என்ன உத்தரவாதம்?
இந்த நான்கு கேள்விகளும் அதிமுக்கியமானது.
பாரதபூமியெங்கும், அனேக மஹான்களிடம்
இக்கேள்வியை கேட்டு விட்டோம்! அவர்கள் பதில் எமக்கு
திருப்தி அளிக்க வில்லை! காரணம் வியாபாரம், விளம்பரம்,
இவைகளே அவர்கள், லட்சியமாக இருக்கிறது. யாம் தேடும்
இரண்டும், இங்கு இருப்பதாக தெரியவில்லை!

குரு:- இங்கும், அவை இரண்டும், இல்லையென, எப்படி முடிவு
செய்தாய்? மேலும் அவை இரண்டும், **உன்னிடம்**
இல்லையென்றால், அவை எங்கும் இருக்க முடியாது! இருக்கக் கூடாது!

சிஷ்யன்:- போதும் ஐயா போதும்! இந்த ஒரு பதிலே போதும்!
"**யாம் சுத்தம்**!" என்றால் "**அசுத்தம்**" சுத்தமே!!
"**யாம் அசுசி**"! " "**அசுசியே**!!
இனி வாக்கை கொடுத்து, மாட்டிக் கொள்ள மாட்டோம்!
தயை செய்து விளக்கம் மட்டும் வேண்டும்! எம்மை மன்னிக்க வேண்டும்!

குரு:- நீ எந்த தப்பும் தவறும், குற்றம் குறையும் செய்யவில்லையே
மன்னிப்பு யார் யாருக்கு கொடுக்க வேண்டும்???

அக்குழந்தை! "**மௌனமாய்**!" கசிந்து
உருகி கண்ணீர் தாரையாக ஓட அழுதது! அக்குழந்தையை



ஆரத்தழுவி, உச்சி மோந்து, முத்தமிட்டு,
நலம் பெறுவாயென ஆசி கூறிவிட்டு,
ஓ எம் ஐயனே! யாம் வாக்கை வைத்தே
விளையாடுபவன்! பரவாயில்லை நீ ஓர் பக்தனை
குழந்தையே! இனி கவனமுடன் கேட்பாயாக!

1. நாம் ஏன் சாதனை செய்ய வேண்டும்? :- குழந்தாய்! எம் ஸ்ரீ மாணிக்க வாசகர், சொல்லும் நிலையில், நாம் நடப்பன, நீந்துவன, பறப்பன, ஊர்வன, மற்றும் கண்ணுக்கு தெரியாத கிருமிகள். மற்றும் மரம், செடி, கொடி, புல், பூண்டு, மண் மலை, இவைகள் அனைத்திலும் தோன்றி மறைந்து. மறைந்து தோன்றி, "கோடானுகோடி"! ஜன்மா எடுத்ததாக தெரிகிறது! அச் ஜன்மாக்களில் கஷ்டம், கவலை பயம், துக்கம், பசி, பிணி, வறுமை மூப்பு, சாக்காடு, என இன்னும் பற்பல கஷ்டநஷ்டங்களை அனுபவித்திருப்போமே, இவைகள் ஓர் "நீங்காத துன்பம்" தானே? இவற்றிலிருந்து, விடுதலை பெறவேண்டுமானால், "பிறவாநிலை"! அவசியம் வேண்டும். அதற்காக மற்றும் அனைத்து சாதனைகளையும், விட்டொழித்து, ஜீவன் முக்தி நிலைக்காக நாம் சாதனை செய்தே ஆக வேண்டும்!

2. நாமும் பாமர மக்களைப் போல், கூட்டுக்கோடு கோவிந்தா போட்டு விட்டு, மஹாப் பிரளய காலத்தில், எல்லோரும் ஒன்றாக, அந்த பிரம்மானந்த சமுத்திரத்தில், கலந்து விடலாமே! இப்போது இச் ஜன்மாவில், இந்த கடுமையான சாதனை தேவையா?



பதில்:- அந்த கஷ்ட நஷ்டம் துன்ப துயரம் "பசிப்பிணி! வியாதி! வறுமை"! இவைகள் பரவாயில்லை என எண்ணுகிறாய் போலும்? இன்னொன்று கேட்கிறேன்.

அவைகளையும் நீ சகித்தால், நீ வேண்டுமானால், கூட்டத்தோடு கோவிந்தா போடு! நடப்பன, ஊர்வன, பறப்பன, நீந்துவன அனைத்திலும் நீ பிறக்கும் போது, "கருவறை (கர்ப்பவாசம்) வாசம்" செய்கிறாயே. அது "ரௌரவாதி நரகக்குழி" ஆகும் (சகிக்க முடியாத நாற்றமும், புழு, பூச்சி, கிருமிகளிடமும் பிடுங்கல் (கடிப்பது) படுவதும்) அது உனக்கு ஒப்புடையதாக இருந்தால், அதாவது "சுகமாக"! இருந்தால், நீயும் கூட்டத்தோடு கோவிந்தா போட்டு விட்டு, பின்னர் வந்து சேரலாம்!

ரிஷ்யன்:- போதும் ஐயனே போதும்! யாமும் இந்த சாதனமே, உம்மோடே வந்து விடுகிறோம்! எம் அடுத்த கேள்வியின், விளக்கம் அருள வேண்டும்?

௧. ஆடிப் பாடிக் கொண்டாடி, பரமபதம் எனச் சொல்லும், பதமுக்தி ஏன் வேண்டாம் என்கிறீர்கள்? கைலாயம், வைகுண்டம், பிரம்மனின் பிரம்மலோகம், இவைகள் விருந்து,



உ

"நாம் அனுபவிக்க" முடியாத
நம் "அனுபவ நிலையாகு"!

நாம் நாமாக இருக்கும் நிலை தேவையா?

குரு:— உன் கேள்வி பழம் முக்கியமா? சுவை முக்கியமா? என கேட்பது போல் இருக்கிறது.

சிஷ்யன்:— ஆமாம் ஐயா! பழம் என்றால் அழகு. அதைப் போல் ஈஸ்வராதிகளும், அவர்கள் உலகங்களும், அழகு தானே? அவைகளை பார்த்து ரஸிப்பவனாக இருந்தால், அதுவே ஓர் தனி ஆனந்தம் தானே! அவைகள் அனைத்தும் நாம் ஆகிவிட்டால், அங்கு இரண்டு இல்லாத தன்மையினால், அங்கு காண்பானும் காட்சியும் இல்லாமல் போய் விடுமே?

குரு: (சிரித்துக் கொண்டே) உனக்கு பழம் வேண்டுமா? சுவை வேண்டுமா??

சிஷ்யன்:— ஐயா! இரண்டும் எனக்கு வேண்டும்!

குரு:— அது நடக்க முடியாத காரியம். பழம் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டுமானால், சுவை இராது!

"சுவைக்க முடியாது"! சுவைக்க வேண்டும் என்றால்? "பழம் அழிந்தே"! ஆக வேண்டும்!

தோன்றின மறையும்! மறைந்தன தோன்றும்! இது நியதி. இந்த ஜகத் ஜீவ ஈஸ்வராதிகளும் இவைகளுக்கு உட்பட்டதே!



ஜகத் ஜீவ ஈஸ்வராதிகளுக்கு உ

தோற்றம், இருப்பு, மாற்றம், மறைவு, இவை நான்கும், மேலே கூறியவைகளுக்கு அவஸ்யம் உண்டு. அவை அழகான **"படம் ஆகும்!"** அவைகளோ நான் நீ நீ சொல்லும் பந்த முக்தியாகும்! இவைகளில் கோடானு கோடி ஜன்மா, எடுத்ததெல்லாம் போதாதா? இன்னமும் ஜன்மா வேண்டுமோ? **"அப்படத்தை"** அதாவது **"நாமரூபங்களை"** கடித்து, அழித்து, அவைகளை நீ உண்டு விட்டால், அவர்களைப் போல் (ஹரிகர்த்தாக்களைப் போல்) நீயும் **"ஹரிதுயில்"** கொள்ளலாமே! ஆகவே,

**"உனக்கு கருக்குழி"** வேண்டுமோ????

**"உனக்கு பரவெளி"** வேண்டுமோ????

(போதும் ஐயனே போதும் கருக்குழி வேண்டாம், பரவெளியே வேண்டும். என்று அக்குழந்தை முடித்துக் கொண்டது)

4. நாம் நம் சாதனையால், பிரம்மானந்த சமுத்திரத்தில் கலந்துவிட்டாலும், சாதனை செய்யாத பாமர மக்களும், மகாப்பிரளய காலத்தில், நம்முடைய பிரம்மானந்த சமுத்திரத்தில், தானே கலந்துவிடுவார்கள்? அப்படியானால் அடுத்த புது யுகத்திலிருந்து, ஜீவ சிருஷ்டியில் அவர்களுடன் நாமும் தானே இங்கு வர வேண்டி வரும்? அப்படியானால் இங்கு நம்



உ

சாதனை தேவையாகப் படவில்லையே? நாம் திரும்பவும், இங்கு வராமல் இருந்தால், நாம் இப்போது, கடும் சாதனை செய்வது சரி என, எமக்குப் படுகிறது. இது சற்று குழப்ப மான கேள்விதான். இருந்தாலும், விளக்கம் சற்று, தெளிவாக இருந்தால் நல்லது?

குரு:– குழந்தாய்! யாம் இப்போது கூறும் பதில்;

"உன் கேள்வியின் பதிலே! "உண்மையில்!" இது சுத்தப் பொய்யே!

பசியின் நிமித்தம், அழும் கைக்குழந்தைக்கு, அதன் தாய் அமுதூட்டும் சமயம், சில பொய்யான கதைகளை சொல்லி, அதை நம்ப வைத்து அமுதூட்டி விட்டு, அவளும் அதை மறந்து விடுவாள். அக்குழந்தையும், "பசி" நீங்கி "தூக்கம்" வந்ததும், எல்லாம் மறந்து விடும்! காரணம் அது சமயம், அதனிடம் "கடமை" இல்லவே இல்லை! அதாவது அதை பதிலைவடுபண்ணும், எண்ணம் அதனிடம் இராது. அதைப் போலும், நீயும் இக்கதையை கேட்டு விட்டு, உன் யதார்த்த சொரூபத்தில், நிலைத்து அனுபூதியில் நிலைத்துக் கொண்டு, இந்த பொய்யான, "நம்பிக்கைகளை"! மறந்து விடுவாயாக. இனி கதையைக் கேள்!



நீர் நிலைகளுக்கு குட்டை என்றும், குளம் என்றும், ஏரி என்றும், கடல் அல்லது சமுத்திரம் என்றும் சொல்லுவார்கள். இதில் பெரிய ஏரிகள் கடல் போன்று, கரைகாணமுடியாத, ஓர் நீர்ப் பரப்பு கொண்டதாகும். கோடைகாலங்களிலும், கால் அல்லது அரை அளவு ஜலம் இருந்தே தீரும். அதுவே ஏரி ஆகும். இந்த ஏரியை சமுத்திரத்திற்கு, ஒப்பனையாக வைத்து இக்கதையை சொல்லுகிறோம்.

இந்த ஏரி நிரம்பிய ஜலமே, பிரம்மானந்த சமுத்திரம் ஆகும். ஜக சிருஷ்டியில், சூரியனின் (இறைவனின்) கதிரியக்கத்தால், இந்த ஏரி ஜலம் நீராவியாக்கப்பட்டு, கருணை மழையாக பொழிந்து, பூமி எங்கும் பரவி, பல நிலைகளில் வடிவெடுக்கிறது. இதுவே **"ஜீவ சிருஷ்டி"** ஆகும்! பின் அவைகள் தம் **"சாதனை"**கள் மூலமாக, இறைநிலையை அடைந்து (சூரியனால் கிரஹிக்கப்பட்டவர்களாய்) சாதனை செய்தவர்கள் மட்டும், ஆங்காங்கு பெய்யும் மழை ஜலமாகி, அப்போதைக்கப்போது, ஏரியாகிய பிரம்மானந்த சமுத்திரத்தை அடைந்து விடுகின்றனர். **"மாரி காலம்"** (மழை காலமே) மஹாப்பிரளய காலமாகும்!



இப்போது அந்த ஏரியில் "சாதுன்"!
மழையால் வந்த "பக்குவ ஆன்மாக்கள்!" அந்த ஏரி ஜலத்தில், பாதி ஜலமாக இருப்பார்கள் என, வைத்துக் கொண்டால், மீதி மாரியில் பெய்யும் மழையால் "நீ சொன்ன பாமர"! மக்களும் அந்த ஏரியில் நிரம்பி விடுவார்கள். பின் "பர்சனத்திற்காக" (போக ஜீவ சிருஷ்டிக்காக) பயன்படும் ஜலமானது, "மேல்" ஜலமாகத்தான் இருக்க முடியுமே தவிர. "அடி ஆழ"! ஜலம் வர வாய்ப்பில்லை!

மேல்மட்ட ஜலம், சிருஷ்டிக்காகவே வந்த அஞ்ஞான (அறியாமையின்) கூட்டம் என கொள்வாயாக!

அடி ஆழ ஜலம், சாதனை செய்து ஜீவன் முக்தியை, அடைந்தவர்கள், எனப் பொருள் கொள்வாயாக! மழைக்காக ஜலம் நீராவியென, ஆக்கப் பட்டாலும். அது மேல்மட்ட ஜலமே! இதை உவமானமாகக் கொண்டு, இப்போதுள்ள ஜீவன் முக்தியின், பயிற்சியும், முயற்சியும், எந்தையது என மட்டும் உணர்வாயாக.



உ

குழந்தாய் இக்கதை, உவமான கதையே
தவிர, உண்மைக் கதை இல்லவே இல்லை.

"உண்மை" என்னவென்றால்

ஓம் பூர்ணமத: பூர்ணமிதம், பூர்ணாத்,
பூர்ண முதச்யதே, பூர்ணஸ்ய, பூர்ணமாதாய,
பூர்ண மேவா, வசிஷ்யதே!!

எனச் சொல்லும் ஸத்திய வாசகப்படி,
குறைவின்றி, நிறைவின்றி, குற்றமின்றி,
குணம் குறிகள் முதலியவை, எவையுமின்றி,
மறைவின்றி, தெரிவின்றி, மனதுமின்றி,
மாயையமான மயக்கங்கள், எவையுமின்றி,
பிரிவின்றி, தனிதின்றி, பிரிவொன்றின்றி,
பேதமுறும், எப்பொருளும் வொன்றுமின்றி,

"அறிவொன்றே" வடிவான,
பிரம்மமாத "பூர்ணமாக"
அமைந்த, "ஸ்வமஹிமையை"
யாவர் எப்படி சொல்ல முடியும்???



உ

மேலும் அக்காலாதீத பரசொரூபத்தை,
முந்தைய யுக, அனுபவ ஸ்ரீமஹான்கள்,
என்ன சொல்கிறார்கள் என்றால்???
உவமான வாசகம்!!!

“கோடி, கோடி” சூர்யப் பிரகாசமென்றும்,
அள்ள அள்ள குறையாத. தின்ன தின்ன திகட்டாத,
நாம் நாமான, “பிரம்மானந்த” சமுத்திரம்
என்றும், அளப்பரிய ‘அகண்ட ஜோதி!’
என்றும். இன்னமும் அனேக விதமாக சொல்வதெல்லாம்,
வார்த்தையின் மாயா ஜாலமே தவிர, உண்மை இல்லை!!!
அதுவாகவே நாம் இருக்கும் போது, நமக்கு தனி இருப்பு
ஏது??? போவதேது? வருவதேது? கூடுதல் குறைவேது? இவை
அனைத்தும், வந்த மாயா மனதின் கூத்தே தவிர உண்மையில்
ஒன்றுமே இல்லை! மனம் உள்ளவர்களுக்கு, உண்டு என்றும்
இல்லை என்றும், “ஏற்பும், மறுப்பும்”
உண்டுதான். மனமற்ற நமக்கு, ஏற்பும் மறுப்பும் இல்லவே
இல்லை. இதுவே பிரமாண உண்மையாகும்! நாம் வந்ததும் இல்லை!
நாம் போவதும் இல்லை! நாம் என்றென்றும், அதுவாகவே இருக்கிறோம்.
“நாம்” மனம் உண்டானால் நாம் உண்டு! மனம் இல்லையானால் நாம் இல்லை!!
சொல் விளக்கம் இல்லை. நாம் அதுவே! அதுவே நாம்!

எல்லாம் ஒன்றே அது நாமே! அதுவே! இது சத்தியம்!
பாபா.



உ

குழந்தாய்!

உன் கேள்வியானது
ஸர்வாங்க சேவை, ஸத்பாவ சேவை, ஆத்மபாவ சேவை
இவைகளின் விளக்கம் கேட்டிருக்கிறாய். இம்மூன்றி
ற்க்கும் சற்று சுருக்கமாக விளக்கம் தருகிறோம். உன்
உள் உணர்வால் உணர்க!

1 ஸர்வாங்க சேவை:— இதன் பொருள் ஸர்வ + அங்க + சேவை =
ஸர்வாங்க சேவையெனப்படும். அதாவது தன் ஸத்குரு தேவருக்கு
அவர் தாவம். அதை சுற்றிய உடை. அவருடைய ஆகாராதிகள். அவரு
டைய ஆசனம், படுக்கை. மேலும் அவர் உபயோகிக்கும் பொருட்களில்
அதிக கவனத்துடன் "தேவையும், சந்நிஹாரித்தலும், காலம், பக்குவம்" அறி
ந்து அவர் சொல்லாமல் நாம் உணர்ந்து செய்யும் சேவையாகும்!

2. ஸத்பாவ சேவை:— இதன் பொருள் அவர் வாக்கியார்த்த சரத்தா
சேவையும்" இடையறாது உடன் இருந்தே ஓர் "குழந்தையை அன்புத்தாய்
கவனிக்கும் நிலையில்" எந்த குண தோஷமும் இல்லாமல் அசாத்தியமான
பொறுமை, அன்பு, கருணை, பணிவு, கனிவு இவைகளுடன் கண்காணிக்கும்
தாய்போல் அவர் சொல்லாமல் உணர்ந்து செய்யும் சேவையாகும்!

3. ஆத்மபாவ சேவை:— இதன் பொருள் இங்கு ஸத்குரு தூல உடலில்
இருந்தாலும், அதை மறைந்தாலும் அவர் வாக்கிய சித்தையில்
அப்படியே அணுப்பிசகாமல் நாம் நடந்து "அவராகவே நாம்
இருந்து" இரண்டற கலந்த நிலையில் ஸ்வய அனுபவமாகவே
"வழி நடத்தலும், வழி நடப்பித்தலும்" இணைந்த நிலையாகும்! இங்கு
நாம் தாமாகவே இருப்பதால் பக்குவ ஆன்மாக்களை வழி நடத்தும்
நிமித்தமாக எந்த "குணதோஷங்களும்" இன்றி ஸத்வ குணமாகிய
"கருணை ஒன்றே ஸ்வ அனுபவமாக" இருக்கவேண்டும்! இதுவே நம்
ஆத்மாவாகிய அனைத்து ஆத்மாக்களுக்கும் நாம் செய்யும் "ஸ்வய
ஆத்ம அனுபவ சேவையாகும்"

பாபா.



உ

அதிகாலை

ஹே பரம்பொருளே!

இந்த ரதமாகிய தூலத்தை எழுந்தருளப்பண்ணிவிட்டாய். இதை வைத்து என்னென்ன காரியங்கள் நடத்த வேண்டுமோ அவைகளை நடத்தி முடியும்! அனைத்தும் நீயே! உன் கை பதுமை! உன் கை கருவி! உன் கை ஆயுதம்! நீ சாரதி இந்த சரீரம் ரதம்! இது சத்யம்! சத்யம்! சத்யம்!

த [signature]

பாபா.



உ — இரவு படுக்கும் முன்

ஹே பரம்பொருளே!

இந்த ஜதமாகிய சரீரத்தை வைத்து விடிந்ததிலிருந்து இது கால பரியந்தம் என்னென்ன காரியங்கள் நடத்தினையோ அவை அனைத்தும் உனதே! சுகமோ துக்கமோ; புண்ணியமோ பாபமோ; நன்மையோ தீமையோ; அனைத்தும் நீ அறிவாய் எந்தப் பிரதி பலனும் எமக்கில்லை அனைத்தும் உமக்கே! எல்லாம் நீ! இது சத்யம்! சத்யம்! சத்யம்!

[signature]

பாபா.

# “குருவின் தெளிநிலை”!



சிஷ்யன் :- ஐயா! ஓர் சிறிய கேள்வி? அதாவது குருசிஷ்ய பாவனையில், ஒரு குருவிடம் பாடம் கேட்பவன், அடுத்த குருவிடம் பாடம் கேட்கவாகாது என்றும், ஒருவரிடம் தீட்சை (மந்திரம்) வாங்கியவன், வேறொரு குருவிடம், தீட்சை வாங்கவும் கூடாதென்றும், தன் தீட்சா மந்திரத்தை, வேறொருவரிடம் சொல்லவும் கூடாதென்றும், ஒரு குருவை விட்டு வேறொரு குருவிடம் மாறுவது, அபச்சாரமாகிய, "குருத்ரோகம்!" என்றும். பேசப்படுகிறதே, அதேசமயம் ஓர் அவதார பிராமணன் 24 பேரை குருவாக ஏற்றுக்கொண்டதாக ஸ்ரீமத்பாகவதம் சொல்கிறதே; இப்படி பலரும் பலவிதமாக, "குருசிஷ்யபாவனையை" சொல்வதால் எமக்கும் சற்று குழப்பமாக இருக்கிறது. இவைகளை சற்று, தெளிவுபடுத்த வேண்டுமென்று பணிந்து வேண்டுகிறேன்!

குரு :— இது நல்ல விளக்கமான கேள்வியே! இதைக்கவனி! குழந்தாய்! நீ இப்போது சொல்லியது "குரு சர்ச்சை!" அனைத்தும் சாமான்ய குருமார்களையே சாரும்! "ஸத்குருநாதருக்கு" இது பொருந்தாது! காரணம் ஸத்குருநாதர் பரசொரூபமாகும். சாமான்ய குரு நாமரூப குண சொரூபமாகும்! பரசொரூபஸ்திதியில் ஸத்குருவிடம் கண்டிப்போ, தண்டிப்போ, இதைச் சார்ந்த எந்த



# "குணதோஷங்களும்"!

இல்லாத தன்மையிருந்தும், ஸத்குருதேவர் ஓர் குழந்தையாகி தம்மையே, சத்சிஷ்யனிடம், பரிபூரணமாக கரைத்துக் கொண்ட தன்மையிருந்தும், (ஏடாகவோ, ஏணியாகவோ அர்ப்பணித்ததால்) "குரு"! அபசாரமோ, நிந்தனையோ, தோஷங்களோ, இருக்கப்பாதை இல்லை. இந்த ரகஸ்யம் இக்கவியில், எவர்க்கும் தெரியப் பாதை இல்லையென்றே சொல்லுவோம். காரணம்:— இந்த கவியில், அனைத்து ஸன்மார்க்க ஸ்தாபனங்களும், "பேர்.புகழ்.பட்டம்.பதவி" போட்டி பொறாமை இவைகள் கவர்ந்த, "பொன்"னிலும் (பணத்திலும்) "பெண்"ணிலும் (இதன் விளக்கம் மௌனம்) சிக்காத எந்த ஸ்தாபனங்களும் இல்லவே இல்லை. மேலும் மூன்றாவது நிலையாக, "மண்" என்ற, "பிரவர்த்தியில்"! அகப்படாதவர்களும் இல்லை! தன்னை உள்ளபடி அறிந்து "நான்தானை"! இருந்து கொண்டு, தம்முடைய "ஆத்மப்" பிரகாசத்திலே, நம்பும் அன்பர்களை, பிரகாசப் படுத்தாமல் (மட்டும்) வாய் ஞானத்திலே, கர்மாப் பிரவர்த்திக்காக, "பிரணர



"தூயிட்டும்" நாம் தூப்படும்! கலிதோஷ மஹிமையால், இருக்கும் ஸாமான்ய குருமார்களுக்கே, நீ சொல்லக் கூடிய, குருத் துரோகம், குரு நிந்தனை, குரு அபசாரம் இவை அனைத்தும் பொருந்தும். இதன் விளக்கங்களை கீழே காண்க!

1. கண்டிப்பு தண்டிப்பு இல்லையானால், பாடம் ஏறுது என்பதே, கலிதோஷ ஆன்ம விளக்கமாகும்!

2. பேர், புகழ், பட்டம், பதவி, பிரவர்த்தி இவைகளின் நிமித்தமே, ஆன்மீக விளக்கம் தரப்படுகிறது!

3. வியாபாரம், விளம்பரம், ஆடம்பரம், இவைகளே, ஆன்மீக வளர்ச்சி யென, விளக்கம் தரப்படுகிறது!

4. பிறரை திருத்துவதே நோக்கமாக கொண்டு, தன்னை அடியோடு மறந்தலே, ஆன்மீகமாக கருதப்படுகிறது!

5. "மக்கள் தொண்டே மஹேசன் தொண்டு" என்பதை, "திலீஷாகமாற்றி", "ஸ்ரீ பகவன் நாம்" ஸ்மரணையை மறந்து, "நானே செய்கிறேன்" என்றும், என்னால் தான் செய்யப்படுகிறது என்றும், இவை அனைத்தும் என்னுடையதே என்றும், "கர்மாவின்" "பலனை" ஸ்ரீ பகவானிடம் சர்வார்ப்பணமாக விடாமல், தாமே ஏற்ற நிலையில் பேர் புகழ் பட்டம் பதவி, தாமே பெற்றலே, இன்றைய ஆன்மீக வளர்ச்சியாகும்.



நற்சமயம் "சக்திக்கே" உரிய நாமமாக இருப்பதாலும், "பலன்" கருதியே செய்யும், "கலி" நாமமாக இருப்பதனாலும், ஆத்ம ஞானம் என்பது, "வேத சாஸ்திர பாட" ஞானமாக (வாய் விளக்க ஞானமாக) இருக்கிறதேயன்றி அனுபவ ஞானமாக, எவரிடமும் இல்லை யென்றே சொல்லுவோம். மேலும் இக்காலம், "ஸாமான்ய" குருவுக்கே, உள்ள நாமமாக இருக்கிறது. "ஸத்குருவுக்கு!!!" உரிய நாமமாக இல்லவே இல்லை! "படிப்பறிவே" 100/100 இருக்கிறது. ஆகவே எல்லோருமே, சக்தியின் பிரவர்த்தியானவ், வித்வத்வம் நிறைந்து; பொறுமை அமைதியின் ஆனந்தம் குறைந்து, "வித்வான்களே" அனைவருமாய் பிரகாசிக்கிறார்கள். எல்லோருமே இக்கலியில், உபதேசிக்கும் "குருவாக" இருக்கிறார்களேயன்றி, பாடம் கேட்கும், பணிவான "சிஷ்யர்கள்" ஒருவரையாவது காணோம்!



"வித்துவான் கத்துவைரான்!" என்ற நிலையில், காலம் மாறிவிட்டது! இனி இதை மாற்றவோ, மறுக்கவோ, விலக்கவோ, எவராலும் முடியாது தான். ஆகவே தந்த்ராவித வித்தைகளை, கற்பிக்கும் குருமாரும், கற்கும் சிஷ்யர்களும், "ஞானகோஷ்டிகளுக்கு!" ஆனாகிவிட்டதன்மையினால், குருத்ரோகம், குருநிந்தனை, குரு அபச்சாரம் எனச், சொல்ல இடமே இல்லை! ஆனாலும் பேசப்படுகிறது "ஆனாலும்!!!"

ஸ்ரீபகவான் கருணையினால், எங்கெங்கோ ஒன்றிரண்டு, "ஸத்தான குருக்களும்!" இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால் ஸத்குரு இல்லை

அவர்களின் கருணையினால், ஸ்ரீபகவத் பக்தியும், அதற்குரிய ஒழுக்க நெறிகளும், போதிக்கப்படுகிறது.

அப்படிப்பட்ட குருமாரால், தெய்வங்களை உணரும் நிலையும், தெய்வதரிஸனங்களும், இன்றும் நிலை பெற்றுத் தான் வருகிறது. அவர்கள் ஸ்ரீபகவான் கிருபையை, பரிபூரணமாக பெற்று, பக்தியின் அடிப்படையான,



உ

சில ஒழுக்க தர்மங்களை, போதிப்பதால் அவைகள், 'வெளியில்' தெரியாத முறையொருாக, நடந்து வருகிறது என்பது 'ஸத்யமே'! அப்படிப்பட்ட குருமார்களிடம், பாடம் கேட்கும் ஸத் சிஷ்யர்கள், எப்படி யிருக்க வேண்டுமென்றால்?

1. நிலைகண்டு, பொருள் கொண்டு, ஒருவரிடம் பாடம் கேட்பவர்கள் வேறொருவரிடம், பாடம் கேட்கவாகாது. காரணம். கருத்து மாறுபாட்டால்; அனுபவம் கூடாது.
2. ஒருவரிடம் மந்திர தீட்சை, வாங்கியிருந்தால், அதை மறக்கவாகாது. வேறொருவரிடமும் சொல்லவாகாது. சொன்னால் அது பலிதமாகாது.
3. ஒருவரிடம் மந்திர தீட்சை வாங்கியவர், வேறொருவரிடம், மந்திர தீட்சை வாங்கவாகாது. அது மஹா அபசாரமும். அதுவே குருத்துரோகமும் ஆகும்.
4. ஒருவருக்கொருவர், தங்கள் குருவை உயர்த்தி, அடுத்த குருமார்களை தாழ்த்தி, எண்ணவோ பேசவோ கூடாது. அது குருப்பிரஷ்டமாகும்! (கீழான ஜன்மா கிடைக்க ஏதுவாகும்!)
5. தன்குருவையே தனக்குப்பிடிக்காத தன்மையால், நிந்தனை செய்து விலகுவோனாயின், மலக்கில் புழுக்கும் கிருமியாகவும், உலர்ந்த புல் பூண்டாகவும், பிறக்க ஏதுவாகும். இப்படி இன்னும், அனேகம் உண்டு. இவை அனைத்தும், சத்குருமார்



"கருணை" உத்தம சிஷ்யாளுக்கு பொருந்தும் என, ஸ்ரீமந்நாராயணருடைய அனுபவ வசனம் இருக்கிறது.

ஓர் அயோக்ய பிராமணன், பல பேர்களை, குருவாக ஏற்றுக் கொண்டதாக ஸ்ரீமத் பாகவதம் சொல்வதும், "ஒழுக்கம், கட்டுப்பாடு", தெய்வ "நம்பிக்கை", தம்முடைய லட்சியத்தில் அசைக்க முடியாத "வைராக்கியம்" இவைகளை போதித்து, "ஓர் ஸத்குருவை" அடைந்து, ஜீவன் முக்தியாகிய "நிர்வாணநிலை" பெறும் நிலைக்கு, தகுதி வழங்கும் "குரு" நியாயமும்.

மேலும் ???

ஓர் ஸத்குரு தேவரிடம், எந்த மந்திரமும் தீட்சைகளும் இருக்கவும் முடியாது! இருக்கவும் கூடாது!! இருந்தால், அது ஸத்குரு ஸ்தானத்திற்கே பொருந்தாது.

ஓர் ஸத்குருதேவர், வேத சாஸ்திர அனுபவம், உடையவராக இருக்கமாட்டார். ஆனால் மேலே கூறிய, ஒழுக்கம் கட்டுப்பாடு இவைகளை, போதிப்பவராக இருக்கமாட்டார். தம்முடைய "சாதனையால்" உணர்த்துபவராக இருப்பார்.

ஓர் ஸத்குருதேவர், நான்கு "மஹாவாக்ய"த்தை,



உ......

விளங்குபவராக இருக்கமாட்டார். "விளங்கியவராக"! இருப்பார். நான்கு மஹாவாக்கியமும் அவரிடம் இராது. நான்குமஹாவாக்கியமும் "அவராகவே"! இருப்பார். இதற்கு உதாரணமாக, "குற்றங்குறை"/ "விருப்பு, வெறுப்பு"/ "பேதம்"! இவைகள் இல்லாதவனே, நான்கு மஹாவாக்கிய ரகஸ்யமாகும்! மேலே கூறிய இம் மூன்றும், இல்லாதவன் இருந்தும் (இறந்தவனே) இல்லாதவனே! இப்படிப்பட்டவனிடம், கண் காணிப்பு, "கண்டிப்பு", "தண்டிப்பு"! எவ்வாறு இருக்கக்கூடும்? தான் இறந்தால்தான் நம் அனுபவத்தால், அவரை "நம்புபவரையும் சாகடிக்க" (இறக்கவைக்க) முடியும்? ஆகவே திரிலோகத்தில், "ஒருவன்!" என எமதண்ணார் சொன்னது போன்று, ஸ்ரீ ஸத்குரு இல்லவே இல்லை. ஆதலால் கண்ணாடிக் கல்லே, வைரம் போல் ஜொலிப்பதுவே, இக்கலி



காலமாக இருப்பதால் இருந்தே ஆக வேண்டும் "சக்தி" குருவே,

"ஸத்குரு!" போல் பிரகாசிக்க வேண்டும்.

"இதுவே கலியுக நியதி" ஆகும்.

மேலும் ஓர் அவதூத பிராமணன், 24 குருமார்களைப் பெற்றதாக, ஸ்ரீமத் பாகவதம் சொல்கிறது. அக்குருமார்கள் யாரென்பதையும்? அவர்கள் என்ன கற்பித்தார்கள் என்பதையும்? அதனால் நாம் உணர்வது என்ன என்பதையும் இவண் சொல்லி, உணர்த்துகிறேன்!

(1) மீனவன் :- ஓர் மீனவன், ஓர் குளத்தில், தூண்டில் போட்டு, மீன் பிடித்துக் கொண்டிருந்தான். அவ்வழியே, ஓர் வழிப் போக்கன் வந்தான். அந்த இடத்தில், பாதை இரண்டாக பிரிகிறது. வந்த வழிப் போக்கன், அம்மீனவனிடம் சென்று அவ் இருவழிகளில், தாம் செல்லும் ஊரின் பெயரைச் சொல்லி, செல்லும் மார்க்கத்தை கேட்டான். அதுசமயம் மீனவன், தூண்டிலில் கவனமாக இருந்ததால், வந்தவனையோ அவன் வார்த்தைகளையோ, மீனவரால் கவனிக்க முடியவில்லை. அவன் கவனம் முழுவதும், தூண்டிலின் மிதப்புக் கட்டை மீதே இருந்தது. வந்த வழிப் போக்கனும், பல முறை கேட்டும், பலனளிக்காததால், இவன் செவிடன் போலும், என எண்ணி, தன் கால்போன வழியில், சென்று கொண்டிருந்தான். அம்மீனவன் தூண்டிலில், மீன் சிக்கிக் கொண்டது போலும்? உடனே அம் மீனை, தூண்டிலின் மூலமாக, வெளியே இழுத்துப் போட்டுவிட்டு ஐயா! ஐயா! தாங்கள் ஏதோ கேட்டீர்களே? அது என்ன விஷயம்? என கேட்டு விட்டு, அவ்வழிப் போக்கனுக்கு, வழி காண்பித்தான்.



உ

அன்பின் குழந்தாய்! இதை அங்கு, தெய்வாதீனமாக வந்த அவதூத பிராமணன் கவனித்தான். அவன் சொன்னதாவது:- ஸ்ரீ பகவானே! இம் மீனவன் எம் குரு ஆகும்! இம்மீனவனைப் போல், எம் கவனம் சிதறாமல், ஸத்தியத்தில் நிலைத்திருக்க வேண்டும். உலகம் கர்மா சம்பந்தம். யாம் ஸத்திய சம்பந்தம். இலௌகீக உலகம், நிலை பெயரினும், யாம் எம் நிலை பெயராமல் இருக்க வேண்டும், என வேண்டிக் கொண்டான்!

② பருந்து:- ஒரு பருந்து ஓர் மாமிசத் துண்டை, எங்கேயோ எடுத்தது. அதை உண்ண ஓர் மரக்கிளையில் அமர்ந்தது. இதை மற்ற பருந்துகளும், காகங்களும் கண்டன. அந்த இரையின் மீது, ஆசை கொண்டு, அப்பருந்துகளும் காகங்களும், மாமிசம் வைத்திருந்த பருந்தை, விரட்டி விரட்டி கொத்தி, அவ்விரையைப் பிடுங்க எத்தனித்தன. மாமிசம் வைத்திருந்த பருந்தும், அவ்விரையை உண்பதற்கு, பல மரங்களிலும், பறந்து பறந்து அமர்ந்தது. அப்பருந்தால், அவ்விரையை உண்ண முடியவில்லை. எல்லாப் பறவைகளாலும், கொத்தப்பட்டதோடல்லாமல், தானும் அவ்விரையை, உண்ண முடியாமல், துக்கத்தை அடைந்த அப்பருந்தானது, இத் தொல்லை இனி நமக்கு வேண்டாம் என, அவ்விரையை விட்டுவிட்டு, தனியே ஓர் மரக்கிளையில், ஆனந்தமாக அமர்ந்து விட்டது.



அம்மாமிசத்துண்டை, வேறொரு பறவை எடுத்துக்கொள்ள, எல்லாப் பறவைகளும், அம்மாமிசத்தை நோக்கிச் சென்று, பறவையை, விரட்ட ஆரம்பித்தன. இப்பறவையை விட்டுவிட்டன!

அறிவின் குழந்தாய்! இதை தெய்வாதீனமாக அங்குவந்த அவதூதப்பிராமணன் கவனித்தான். ஹே பகவானே! இந்த "பருந்து" எமக்குக் குரு ஆகும் என்று எண்ணி இப்பருந்தைப் போல, மண் பொன் ஆசையென்னும், மாமிசத்தை விட்டுவிட்டு, அப்பருந்தைப் போல் "ஏகாந்தமாக" இருந்துகொண்டு, கண்மூடி "மௌனியாய்" "உன்னோடு" ஒன்றியிருக்க, அருள்வாய் என்றான்.

(3) மலைப்பாம்பு:— மலைப்பாம்பு இரையை தேடி அலையாது. ஸ்ரீபகவான் கருணையால், "விதி" முடிந்த எந்த ஜீவனையாவது, இரையாக இறைவன் அனுப்புவான். அப்பாம்பு, யதேச்சையாக வந்த, அந்த இரையை உண்ணும். இரையை உண்ட அப்பாம்பு, தாகசாந்திக்காக, நீர்நிலையை நாடி தேடிச் செல்வதில்லை! இருந்த இடத்தில் இருந்துகொண்டே, அப்பாம்பு ஆகாயத்தில், ஜலத்தைத் தேடும். இறைவன் கருணையால், மேகம் கூடி மழை பொழியும். யதேச்சையாக பெய்யும், மழை ஜலம் அருந்தி சுகமாக இருக்கும்!



உ

எம் ஞானச் செல்வமே! இதைக் கவனி
த்த இந்த அவதூத பிராமணன் சொல்லு
வான்! ஹே பரமாத்மா! இந்த மலைப்
பாம்பை, எம் குருவாக ஏற்றுக் கொண்
டிருேம். இப்பாம்பைப் போல், யாம் எதை
யும் "நாடித் தேடி"! செல்லாமல்,
எம் வினையின்படி, "எம்மை" நாடித் தேடி வரு
பவைகளை மட்டும், "ஈஸ்வரார்ப்பண
மாக"! ஏற்றுக் கொண்டு, உன் நாமஸ்மரணையில்,
ஆனந்தமாக இருக்க, அருள் புரிவாய் என்றான்.

(4) ஆட்டக்காரி:- ஓர் கரக (கும்ப) ஆட்டக்
காரி, குடத்தைத் தலையில் வைத்து வண்ணம், ஓர் பெரும்
கூட்டத்தில், ஆடிக் கொண்டிருந்தாள். அவள்
அக்கூட்டத்தில், சிலருடன் சிரிப்பாள். சிலரின்
கையைப் பற்றி இழுப்பாள். சிலர் பைகளில் தன்
கையை விட்டு, பணம் எடுப்பாள். சிலரிடம்
கண் சிமிட்டுவாள். இப்படிப் பலரிடம், பலவாறு
நடந்து கொண்டாலும், அவள் "கவனம்"!
தம் தலை மீதுள்ள, "குடத்தின்"! மீதுதான்
இருக்கும். (நாதி விரியாடி இருகை வீசி வந்தாலும்
நாதிமனம் குடத்தின் மீது தான்) இதைக் கவனித்த,



இந்த அவதூத பிராமணன் சொல்லுவான், ஹே மகவானே! இந்த நதி எம் குருவாகும். இந்த நதியைப்போல், இந்த அஞ்ஞான ஜனசமூகத்துடன் திரிந்தாலும்,

"பேசலும் பிதற்றலும் இங்கே,
"ஆசையும் நேசமும் அங்கே!

என்ற நிலையில், புனியம் பழமும், ஒரு போலும். எந்த குணதோஷங்களும், எம்மை ஒட்டாமல் உன்மீதே எண்ணம் உள்ளவனாக, இருக்க அருள்புரிவாய் என வேண்டினேன்.

(௫) ஓர் குடும்பப் பெண்:— ஓர் குடும்பப் பெண், உரலில் அரிசியை போட்டு, மாவு ஆட்டிக் கொண்டிருந்தாள். அது சமயம்?

A. தன் குழந்தைக்கு, கொஞ்சி கையில் பால் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

B. ஓர் பால்காரனிடம், பால் கணக்கை சொல்லி, கணக்கு தப்பாமலும் இருந்தாள்.

C. ஓர் மளிகைக் கடைக்காரனிடம், சாமான் விபரம் சொல்லிக் கொண்டிருந்தாள்.

D. ஓர் ஜவுளி வியாபாரிக்கு இவ்வளவு பணம் கொடு என, தன் மகனிடம் கணக்கும், சொல்லிக் கொண்டிருந்தாள். இத்தனை காரியம் பார்த்தாலும், மாவாட்டும் வேலையில், சிரத்தையாக இருந்து,



கொண்டு "தன் விரல்", உரலில் சிக்காவண்ணம், கவனமாக வும் இருந்தாள்! இவளைக் கவனித்த, இந்த அவதூதபிராமணன், சொல்லுவான்: ஹே பரமாத்மா! இக்குமரிப் பெண், எம்முடைய குருவாகும். இக்குமரிப் பெண் உலகிய காரியங்கள் பலபல செய்தாலும், "தன் கவனம்!" தன்னை விரல், உரலில் சிக்காத வண்ணம், எப்படி "எச்சரிக்கையாக" இருப்பது போல், யானும் எம் வினை உடல், வினை சம்பந்த காரியங்களில், ஈடுபட்டாலும் எம்மனம், "தற்கவன சக்தி" யோடு, புண்ணியம் பாவம் இரு போதும், உலகியலில் ஒட்டாமலிருக்க, அருள்புரிய வேண்டுமென வேண்டினான்.

(6) சந்திரன்:— சந்திரனைப் பார்த்து இந்த அவதூத பிராமணன் சொல்லுவான். இச் "சந்திரன்!" எம் குருவாகும் என்றான். ஹே பகவானே! இச்சந்திரனவன், சூரியனுடைய கடுமையான கதிரியக்கங்களை, தாம் ஏற்றுக் கொண்டு, நமக்கு இதமானக் குளிர்ச்சி கொடுப்பது போல், யானும் இந்தக் "கடுமையான குணதோஷ" ஜனசமூகத்தில் சஞ்சரித்தாலும் நிஷ்டையுடைய



அக்குணத்தோடிங்களாயாம், ஜீரணித்துக் கொண்டு, அனைத்து ஜீவகோடிகள் மீதும், "ஸ்ரீபகவத்பிரேமை" என்னும், அன்பை மட்டும் செலுத்தி அன்பின் சொரூபமாகவே, இருக்க அருள்வாயாக, என பணிவுடன் வேண்டிக் கொண்டான்.

(7) சகோரப்பட்சி:— சகோரப்பட்சியானது, ஆகாயத்தில் அதி உயரப் பறக்கும். அது எக்காலமும், பூமிக்கு இறங்குவதில்லை. வாயுவே அதன் ஆகாரமாகும். இனச் செயற்கையால், அவை ஆகாயத்திலேயே முட்டையிடும். அடைகாக்காமலேயே, சூரிய வெப்பத்தினால், குஞ்சு பொறிக்கும். பூமியின் ஈர்ப்பு சக்தியால் குஞ்சுகள் பூமிக்கு இழுக்கப்படும். அக்குஞ்சுகளும், தெய்வ பலத்தால் தாம் கீழே இழுக்கப்படுவதை உணர்ந்து, உடனே மேல் நோக்கி பறக்க ஆரம்பித்துவிடும். அப்பறவைகள் விதி முடிந்து மரணம் அடைந்தால், அவைகளின் தாவம் பூமி நோக்கி இழுத்து வரப்படும். ஆனால் இறைவன் கிருபையினால், சூரிய வெப்பத்தாலும், காற்றாலும் திராவிக்கப்பட்டு, பொடிப் பொடியாகி, தூசி ஆகி, ஜீவ அணுக்களாகி, "ஆத்மாவாகி" பரமோடு பரமாகி விடும்.

(இதை ஞானிகள் சிவசமயம், காரண சம்பந்த தாவம் ஏற்கும், பிராப்தம் இருந்தால், "லீன" பற்றுமல் இருப்பதற்காக, இவ்வடிவை ஏற்கிறார்கள் என, ஸ்ரீ மஹான்களின் அனுபவ வசனமாக இருக்கிறது.)



இந்த சகோரப் பட்சியின் நிலையை, உணர்ந்த இவ் அவதூத பிராமணன், சொல்லுவான் :— ஹே பரமாத்மா! எம் தாவமும், வினை விதி வசத்தால், ஆசியில் சஞ்சாரம் செய்தாலும், "ஏகாமாவும்" பற்றுதல் நிலையில், "இயல்பாக!" இருப்பதிலும், கிடைப்பதிலும், நடப்பதிலும், "பூரணநிறைவாகவே!" இருக்க அருள் புரிவாயாக, என வேண்டிக் கொண்டான்!

இந்த விதமாக, ஓர் அவதூத பிராமணன், உபதேசம் பெற்ற குருமார்களில், "நமக்குகந்த (நம் ஆத்ம ஞான பாடத்திற்குகந்த) ஏழு பேரை மட்டும், தொகுக்கச் சொல்லு, அவன் ஆணையுடன், அவனே தந்தான். மற்றும் பதினொரு பேர், நமக்குத் தேவையில்லை போலும்? இதன் மூலமாக இவ், "ஒழுக்கநிலை, வைராக்கியங்கள்!" நமக்குத் தேவை! இவைகளை அறிவு சார்ந்து நாம் நோக்கும்போது, நடப்பன, பறப்பன, நீந்துவன, ஊர்வன முதலிய அனைத்து ஜீவ வர்க்கங்களும், "உலகமே!" நம் ஆத்ம ஞான சாதனையின் நிலைக்கும், ஓர் பயிற்சிக் கூடமாகவும்; பயிற்சியின் ஆசிரியர்களாகவும்,

(உலகம் நாடக மேடையாகும். ஜீவவர்க்கங்கள் ஆசிரியர்களாகும்)



உ

நாம் எடுத்துக் கொண்டால்? நலம் பெற முடியும்.

"விரோத குரோதமில்லை"!

"கஷ்டநஷ்டமில்லை"!

"சோதனை வேதனையில்லை"!

"சொந்த பந்த பாச உறவில்லை"!

"புண்ணிய பாப வினைகளில்லை"

அதனால் "ஜனனமரணமில்லை" என்றாகி விடும்!!!

ஜகத்தாகவும், அனைத்து ஜீவ கோடிகளாகவும்,

"நாமரூபங்களாக"! பார்த்தால், குண தோஷங்கள் பின்னி பிணையாடி, புண்ணிய பாபமென்னும், வினைகளைப் பெருக்கி, ஜனனமரணமென்னும், சுடபத்தில் (பள்ளத்தில்) தள்ளி விடும்!

மேலே சொன்ன, ஸாமான்ய குருமார்களாலேயே இவ்வுலகம், விளங்கப்படுகிறது என்பது, ஐக்கியமே!!!

ஆனால் ஜீவன் முக்திக்குமட்டும், ஸத்குரு தேவை!



உ

ஸ்ரீமத் பாகவதத்தில் சொல்லும், 24 குருமார்களும், போதிக்கவரவில்லை தங்களுடைய நடைமுறை வாழ்க்கையாலேயே, "தாம் சாதனையாக" இருந்துகொண்டு, தம் அனுபவத்தை மட்டும், நமக்கு காட்டாமல் காட்டி; சொல்லாமல் உணர்த்தி, "முழுப்பலனையும்" தந்தவர்களாவர்.

ஆனால் கலியுக போதனை குருமார்கள், தாங்கள் போதிப்பதோடு சரி. அவர்களும் சாதிப்பதும் இல்லை. ஆகவே அவர்கள் போதனையானது, பலனளிப்பதுமில்லை.

இதில் கூறும் குருமார்கள் அனைவரும், மனிதனாகவும், பறவையாகவும், ஊர்வனவாகவும், நடப்பனவாகவும், இருந்தாலும், அவர்கள் நமக்கு "போதிக்க" வேணுமென்று, அவர்கள் சாதனையை காட்டவில்லை. இயற்கையாகவே ("இறைவன்" செயலாலேயே) அவை நடந்தன. அவை நமக்கு அனுபவ பாடமாயின. இதிலிருந்து என்ன உணர்கிறோம் என்றால், போதனையோ, சாதனையோ, நாம் செய்கிறோம் என்ற எண்ணமில்லாமல், "அவன்" (இறைவன்) ஆட்டுகிறான். நாம் ஆடுகிறோம் என்று.



ஒரு எண்ணத்தை மட்டும், மனதில் கொண்டால், அனைத்துமே முழுமையான "சாயுஜ்யமாக"! மாறி, நல்ல பலனை தாமே தரும். நாம் சாதிக்க வேண்டும், என்ற எண்ணம் கொண்டால், அவ்வெண்ணமே நம் சாதனைக்கு தடையாய் முடியும்!

இதைத்தான் எம்ரிபு முனிவன், தன் 14 வது பாடலில் சொன்னான்.

நரர் சுரராய் திரியக்காய் நகவனதி,
நானவாய் நாடியிலும் நாட்ட மெல்லாம்,
தெரிவுருவாய் நிகழ்கின்ற தேவதேவன்,
திருவுருவே என்று திடத்தியானம் செய்து,
இருகுணமும் இழந்து அமலஸத்வம் மேவாய்,
இருக்கின்ற இச்சமமதை விருத்தி கொண்டே,
பரமசிவம் பரிபூரண சொரூபம் தன்னை,
பார்த்திடலாம், மற்றொன்றால் பார்க்க வொண்ணா

என்றான்!

அனந்த ஜீவ கோடிகளையும், அதாவது மனிதன், மற்றும் நடப்பன, பறப்பன, ஊர்வன, நீந்துவன, ஆகிய அனைத்து ஜீவர்களையும் "நாமரூபமாகப்"! பார்ப்பது, உன் மனோமய கற்பனை சொரூபங்களாகும். அவைகள் எங்களுக்கு, இன்ன நாமமாயிட்டு அழையுங்கள் என சொன்னதும் இல்லை. வேறு நாமம் சொல்லி அழைத்தாலும், அவைகள் மறுக்கப் போவதும் இல்லை. அப்படி



நீங்கள் நாமா சொல்லி, அழைக்கும் போது, இது இன்னது; இது இன்னது செய்யும்; இதன் சுபாவம் இத்தகையது; என ஒவ்வொன்றுக்கும். உங்கள் கற்பனையின் னியாலேயே, "குணங்களை"/யும் கொடுத்துக் கொண்டீர்கள். அக்குணங்களே, "ரஜஸ், தமஸ்"/ என இருகுணங்களாயின. இப்போதுஇந்த நாமரூபங்களுக்கும், அதன் குணங்களுக்கும், அவைகளும் பொறுப்பல்ல. நம் இறைவனும் பொறுப்பல்ல. நீங்களே அதாவது உங்கள் "மனமே"/ முழு பொறுப்பாகும்.

இவை நெடுங்காலவ, பழக்க வழக்கங்களால் வந்ததாகும்.

பழக்கம் :— வார்த்தையின் விளையாட்டு!

வழக்கம் :— செயலின் விளையாட்டு!

ஆகவே இங்கு, எல்லாமே இறைவன் படைப்பு தானே என்றும்; எல்லாமே இறைவன் செயல்தானே என்றும்; உங்கள் அனுபவத்திற்கு, வந்துவிட்டால், சந்தேகம் கலக்கம், பயம், துக்கம் எங்கே உண்டாகும்? உங்கள் மனதால் போட்ட, தடையாகிய நாமரூப குணங்கள், இல்லையென ஆகிவிட்டால், அங்கு இருப்பது "ஒருவன்" தானே? அவன் "இறைவன்" தானே இருக்க முடியும்?



உ

"பயமே பலிக்கும்" என்பது போலும், "எண்ணமே" (வாக்கே) "வாழ்க்கை" என்பது போலும், ஓர் வலைய (கவலையை) நீங்களோ உண்டு பண்ணியும் நீங்களே இஷ்டப்பட்டு, "கஷ்டங்கள்" வாங்கிக் கொண்டால், இறைவன்தான் என்ன செய்வான்? மனம் இவ்வாத மஹான்கள்தான் (குருதேவர்தான்) என்ன செய்வார்? "பிரமாணமாக" சொல்கிறோம்! உங்கள் மாயா மனதின், நாம ரூப குண தோஷங்களை, விட்ட மறுக்ஷணம், அங்கு "ஸ்ரீ பகவான்" தானே இருக்க முடியும்? இருக்கக் கூடும்? வேறு எவர் உளர் இங்கு? "மாற்றான் (திருடன்) போலும், பூதம் போலும் உள்ள விளையாட்டாக "முகமூடி" அணிந்து, தன் தங்கையிடம் அவள் அண்ணன் வந்து, பய முறுத்தும் போது, "அண்ணா"! (கண்ணா) எம்மை பய முறுத்தியது போதும், என "உருக" வேண்டினால், அவன் தன் முகமூடியை, கழற்றி எறிந்துவிட்டு, உன் அண்ணாவாக (கண்ணனாக) அவசியம் நிற்பானே! இங்கு உன் மன உருக்கமும், கண்ணீரின் பெருக்கமும்



நான் அவன் முகமூடியை! (மாயையின் திரையை) அகற்ற முடியுமே யன்றி, வேறு எந்த மார்க்கமும், பலனளிக்காது என்பது, எம் ஸ்வய அனுபவமாகும்! இதை உணர்!

இருப்பது "ஒன்றே"! அதை உன் மமதையே, கற்பனை வடிவில், "பற்பலவாக"! கண்டாய். அக்கற்பனையை விடுவது, உன் மனதின் வேலையாகும். அக்கற்பனையை விடுவது, மனமற்ற இறைவன் வேலையில்லை. ஆனாலும், உன் மாயாமனம், வந்த இடமோ, இறைவனின் மாயாவாகும். உன் மனம் வந்த இடத்திலேயே உன் மனதை விடுவது என்றால், "ஒரே வழி"!

"நான்", "என்னை", "என்னுடையதை" நீக்கு. அகற்று மாற்று "எல்லாம் நீயே! எல்லாம் உன்னதே! எல்லாம் உன்னுடையதே! என ஆக்குவாயாக. அவனாகவே ஆகிவிடுவாய்! இது ஸத்தியம்.



உ

"எல்லாமாய் எங்குமாய்!" நிற்பவன் ஒருவனே!

உன் உள்ளம் என்ற கண்ணாடி "மோஹத்தினால்," உடைந்து போன தன்மையினால் (உடைந்த கண்ணாடியில் பல உருவம் தெரிவது போல்) பலபல நாமரூபமாக அவனே தோற்றுகிறான்.

மோஹமும், போகமும், இணைந்த தன்மையினால்,

மோஹம்:- சின்ன சின்ன ஆசைகள், அழிக்கப்படாத தன்மையினால், அவை பெரிய ஆசைகளாய் விரிவடைந்து, மறுக்க முடியாத, மாற்ற முடியாத, விலக்க முடியாத விடமுடியாத, ஆசைகளாகி, விளக்கில் படுமென, மயங்கி விழும், விட்டில் பூச்சியென ஆகுதல்!

போகம்:- மேலே கூறிய, விடாப்பிடியான "ஆசையால்" அரிப்பெடுக்கும் படைபோல், விடாமல், சொறிந்து சொறிந்து, ரணமாகி, "புரையோடி" அப்பாகத்தையே இழக்கும் (வெட்டி எறியும்) அவலநிலை!

"புனரபி ஜனனம் புனரபி மரணம்"

(இதுவே மோஹ போகத்தின் தன்மை)



உ

பற்பல நாமரூபங்களாகத் தோற்றி
உன்மனமே மோஹ போகங்களுக்கு,
ஆட்பட்டு விட்டது. அங்கு?
"எல்லாம் ஒருவனே"!
நாம் அவன் குழந்தையே! அதேபோல் அனைவரும்,
அவன் குழந்தைகளே என்பது, சந்தேகமற
"உண்மை"! நிச்சயமானால்; உன்மனக் கண்ணாடி
உடையவில்லையெனும் பொருள் கொள்வாயாக.
மனக்கண்ணாடி உடையாத நிலையில், அனைத்து
நாமரூப மயக்கங்களும், இல்லாதொழியும்!
நாமரூப மயக்கம், இல்லையானால், அங்கு இருப்பது
"ஒருவனே"! அவன் நம் "இறைவனே",
"இறப்பும் பிறப்பும் பொருந்த, எமக்கெவ்வண்ணம்
வந்ததென, எண்ணி (அறிவு ஊன்றி)
பார்த்ததில், "நினைத்தலும், மறத்தலுமாய்!
நின்ற வஞ்சனையான,



"மாயா மனதால்"! வந்தது எனத் தெளிந்தோம்!" என்றார் ஓர் அன்பர். இதிலிருந்து என்ன உணர்கிறோம் என்றால்?

காலாதீத "ஒன்றே" சத்தம்! அது ஸத்யம்!

இயக்கமற்ற அது, இயங்குவதற்காக, இறை சொரூபமாக வந்ததும், தம் நிழல் வடிவமான, "மாயாவினால்"! உலகை தோற்றுவித்ததும். அவ்வுலகில் விளையாடும் நிமித்தமாக, தாமே அனைத்து ஜீவகோடிகளும் ஆனது. விளையாடுவதற்கு, ஓர் "உபகரணம்"! தேவையென தாம் மாயாவிலிருந்து, "மனதை" உண்டு பண்ணிக் கொண்டு, அம் மாயா மனதினால், அனைத்தையும் (மனித வர்க்கத்தை மட்டும்) பற்றச் செய்து, அப்பற்றினால், விளையாடிக் கொண்டிருக்கிறது. இங்கு பற்றப்படுவது "நாமரூப ஜகம்!"

பற்றியிருப்பது "மாயாமனம்!!"



மனதால் பற்றப் பட்ட இந்த "ஜீவனானவன்"! (மனிதனானவன்)

நாம் இறை சொரூபம், என்பதை மறந்து,

"மோஹத்திலும் அதன் போகத்திலும்,"

முன்கூறிய அஹங்கார, அதிகார, அபிமான, ஆதிக்க வெறிகளால், பிடிக்கப்பட்டு "நான்"! கஷ்டப்படுகிறேன்! "நான்"! சுகப்படுகிறேன்! என்ற "மன எண்ணத்தால்"! சஞ்சலப்படுவது "போல்" நடித்து விளையாடிக் கொண்டிருக்கிறான். இது விளையாட்டே தவிர, இது "விஷயம்"! இல்லவே இல்லை. ஆனால் மனம் படைத்த, அனைத்து மனித இனங்களுக்கும் மட்டும், இது விளையாட்டாக, தென்படாமல், விஷயமாக (வினையாக) தோற்றுகிறது. இது "மனதின்"! கோளாறே தவிர; இது மனிதன் (ஜீவாத்மாவின்) கோளாறு அல்ல அம்மனிதன் யாம் ஜீவனல்ல என்ற, உறுதி நிச்சயம்



உ

தம்மனதால் செய்து, அதே மனதால் ஆரம்பநிலையென்றால், நாம் இறைவனை "குழந்தை" என்றும், முடிந்த பக்குவம் ஆனநிலையென்றால், நாம் "இறைவனே" என்றும், களங்கம், கலக்கம், பயம், அற்றநிலையில் "மனம்" தெளிவடைந்தால், நாமரூப ஜகஜீவ சொரூபங்கள், தோன்றுதும் மறைந்து விடும்! அங்கு அனைத்தும், "இறைவனாக" தோற்றவாம்! அல்லது அனுபவ முதிர்ச்சியினால், அனைத்தும் "நாமாக" தோற்றவாம்! இந்நிலை கிட்டும் போது, குரு கிருபையினால் (அவர் வாக்கிய சிரத்தையினால்) "அகண்டாபாவன்" வெகு எளிதாக கிடைக்கும்! இதுவே சர்வசாட்சித் தன்மையாகும்! இதுவே ஜீவன் முக்தி நிலையென்ற சாட்சி தன்மை பெறமல், அகண்டபாவனையா ஆகும், கிய, சர்வசாட்சித் தன்மை பெறமுடியாது. ஆகவே அகண்ட பாவனையே, ஜீவன் முக்தனின் லட்சணம் ஆகும்.



உ

“நாமரூப” ஜகமானது, ஓர் வினையாட்டுகூடமாகவும், வினையாளும் பொருளாகவும் உள்ள “ஜட” சொரூபமாகும்.

மனிதனின் தூலஉடல், புண்ணியபாப சம்பந்த “வினைப்” பதுமையாகும்! இதுவும் “ஜடமே!”

இவ்வினையை இயக்குவது, “மாயாமனம்” ஆகும்!

இம்மனம் சூட்சுமமாகும். இந்த சூட்சும மனதை இயக்குவது, “விதி” யென்ற சூட்சும இறை சொரூபமாகும்.

இவ்வுலகமாகிய ஜடமும், வினைப் பொம்மையாகிய ஜடமும், தாமே இயங்கமுடியாது. ஆகவே இவை இரண்டும் எப்படி இயங்குகிறதென்றால்? வினை உடலுக்கு “மனமும்”, ஜடசொரூப உலகிற்கு, விதியென்ற இறைவனும், இருந்து கொண்டு ஒழுங்காக பாரபட்ச தோஷம் இல்லாமல் நடைபெறுகிறது.

ஆனால் “சங்கல்ப விகல்பமாகிய” கற்பனையும், அதில் இருந்த உணர்வும் கூடிய இந்த மனமானது, உண்மை, உரிமை, அதிகாரம் ஆதிக்கம்



உ

இவைகளால் பீடிக்கப்பட்ட தன்மையினால்,
"சுகமாக" நடைபெறும் கர்மாவை,
"பரு உண்டாக்கி"!
பிறவிக் களையை, மீண்டும் மீண்டும் பின்னக் கொள்கிறேன்.
ஆகவே இங்கு மனமே தடை! மனமே தடை நீக்கம்.
"குற்றமே" தடை! குற்ற நீக்கமே தடை நீக்கமாகும்.
மனம் சூக்ஷ்மமாக இருப்பதால், அம்மனம் தனியே இயங்க
முடியாது. அது ஏதாவது ஒன்றைப் பற்றியே இயங்க முடியும்.
ஜடசொரூபமாகிய, "உடல் உலகை"!
மனம் பற்றுவதாலேயும், அதுவும் இயலாத காரியமே!
ஆகவே ஜட சொரூப உடல் உலகை, இயக்கத்தின் காரண
மாக, இது இத்தகையது, என்றும், இன்னது செய்யும் என்றும்
"தோஷ குணங்கள்"! நம் கற்பனை வடிவில்
கொடுத்தால்தான், அந்த சூக்ஷ்மமான கற்பனை குணங்களை,
வைத்துக் கொண்டு, இந்த மனம் இயங்க முடியும். இந்த
நாம ரூப ஜட சொரூபத்தில், நாம் கொடுத்த குணங்களை
வைத்து, ஆடும் இந்த மனமானது, கற்பனை சொரூபமான,
சூக்ஷமமான இறைவனிடம், இம்மனம் செல்ல முடியாது.
காரணம் என்னவென்றால்? (சென்றால் மனம் மறைந்துவிடும்)

A. இறைவனின் மாயையில், தோன்றிய இம்மனமானது
அங்கு சென்றால் இல்லாமல் மறைந்துவிடும்! மறைந்தே
ஆகவேண்டும். இதுவே நியதி! (சமுத்திரத்தின் உப்பு பொம்மை போல்)

B. இறைவன் ஸத்வ குண சம்பன்னன். ஸத்வ குணத்தில் மன
தின் விளையாட்டு இருக்க முடியாது. இருக்கவும் கூடாது.



(ஸத்வ குணம்)

ஸத்வ குணத்தில், அமைதி, சாந்தி, ஆனந்தம் இவைகளே உண்டு. ஆகவே அங்கு சென்றால் மனதின் "நான்குணம்"! அழிந்து "சுத்த குணம்" என்ற ஏகுணம் "ஒன்றே"! இருக்க முடியும்! இருக்கக் கூடும்!

C. இறைவனின் ஸத்வ குணமாகிய, ஏக குணத்தில் மனம் ஈடு பட்டால், அஹங்காரம், அதிகாரம், ஆதிக்கம் அபிமானம் இருக்கப் பார்த்தில்லை.

D. மேலே சொன்ன குணங்கள் இல்லையானால், அது மனம் என்ற பெயரும் அழிந்து, "அறிவு" என ஆகி விடும்.

E. மனம் அறிவாகி, அது மேலும் "மௌனமாகுமே" யன்றி நாமரூப "ஜகத்தாக"/ முடியாது.

ஆகவே நாம் "ஸத்வகுணம்"/ ஒன்றைமட்டும் ஏற்றுக் கொண்டால் போதும். மற்றும் மேல்நோக்கிய நிலை கண்டாலே உண்டாகிவிடும். காரணம்?

அனைத்தும் அவன் பொருள் என்றும்; அனைத்தும் அவன் செயல் என்றும்; அவனன்றி அணுவும் அசையாது, என்பதும் ஸத்தியமானால் மனம் எப்படி இருக்க முடியும்?

மனதாலேயே அதிகாரம், அஹங்காரம் ஆதிக்கம் செலுத்திய உனக்கு, இருப்பேது? இயக்கமேது? அங்கு நாமரூப குணமேது?



உ

ஏககுணம் என்ற, மனம் எந்த வழி, இறை சொரூபமாகிய "ஸத்வகுணத்தில்" நின்று விட்டால், மனம் மனமாக இராது. மனம் அறிவாக இருக்கும். மனம் மேலும் மேலும், மேல் நோக்கிச் சென்றால் "நிர்க்குணம்" என்ற நிலையில் "மறைந்தால்" "அகண்ட பர பாவனையாகிய" சர்வசாட்சி தன்மையில், கரைந்து மயமாகி விடும்! அங்கு "மனமும்", அது தோன்றிய "மாயையும்" இல்லை. "நாம் நாமாக" இருப்போம் "நாம் அதுவாக" இருப்போம்.

கேள்வி:— ஐயா! தாங்கள் மடலில், இறை நிலை ஜீவரட்சிப்பு என்றும். குருநிலை ஜீவ அழிப்பு (அழைப்பு) எனவும், சொல்கிறீர்களே? அழித்தல் என்றால், சம்ஹாரம் (கொல்லுதல்) எனப்பொருள் படுகிறதே; அந்த அழித்தலா? அதால் ஜீவரட்சிப்பு, இறை நிலை யென்பது, எமக்கு விளங்குகிறது. ஆகவே இவ்விரண்டையும், சற்று விளக்கினால் நலமாக இருக்கும்?

பதில்:— நல்ல கேள்விதான். நீ சொல்லும் நிலையில், அழித்தல் என்றால், கொல்லும் சம்ஹார நிலை இல்லை. நான் ஜீவன் என எண்ணும், உன் அறியாமையின் "ஜீவத்துவத்தை"! அழித்தலாகும்.



உ

அதாவது, இந்நிலையை ஸ்ரீமஹான்கள் மூன்றாக, பிரித்துச் சொல்லுவார்கள். அதாவது?

1. இறைநிலை "ஜீவ ரட்சிப்பு"!

2. ஸத்குருநிலை "ஜீவ அழிப்பு"!

3. சாமான்ய குருநிலை "ஜீவ சிட்சிப்பு"!

என மூன்றாக சொன்னார்கள். இனி இதன் விபரமாவது?

1. ஜீவ ரட்சிப்பு:— (இது இறைநிலையாகும்.) உணவு, உடை, இருப்பிடம், ஆகிய இம் மூன்றும் அவரவர் "வினையறிந்து"! விதிதாச் சாரப்படி, பேதமற்ற நிலையில், "ஒரு க்ஷணமும்" (ஒருவிநாடியும்) தப்பாமல், ஆங்காங்கே, அப்போதைக்கப்போது, இச்ஜீவர்களின் கொடுக்கல் வாங்கல் என்ற நிலையில், பண்டப் பரிவர்த்தனமாக (வியாபாரமாக) "தெய்வம் மனுஷ்யாணாம்"! என்ற உண்மையின் வேத சாஸ்திரப்படி, கொடுத்து அரவணைப்பது ஜீவ ரட்சிப்பு ஆகும்.

3. ஜீவ சிட்சிப்பு:— இது சாமான்ய குருநிலையாகும்! வேத சாஸ்திர பாடங்களில், (அறிந்து வித்தைகளையும்) அதை போதிக்கும் நிலையில், கண்டிப்பும், தண்டிப்பும், அவசியம் உண்டு. கைபடிக்கும் போது, எவ்வா அன்பாக ருக்ஷமே இக்கேள்வி எழுவது சகஜமே! ஆனால்??? (கண்டிப்பு தண்டிப்பு இல்லாமல், பாடம் எவ்வாறு நடைபெறும்?)



உ

கலிதோஷத்தால், அனைத்தும்
பீடிக்கப்பட்டுவிட்டதால், இதை மறுக்கவோ,
மாற்றவோ முடியாது தான்.

இதை கவனி!

"கண்டிப்பும், தண்டிப்பும் (சிட்சிப்பும்) **கொடூர குண** சம்பந்தமாகும். எத்பாவம் தத் பவதி. என்ற நியதியில், "**நீ எக்குணம்** கொண்டு பாடம் எங்கு போதிக்கிறாயோ? அங்கு "**அக்குணம்தானே பதிவாகும்**"! பின் அங்கு ஸத்வ குணமும், அடுத்தநிலை நிர்குணமும், எப்படி பதிவாகும்? எப்படி இருக்க முடியும்?

சாந்தி, அன்பு, கருணை, பொறுமை, குற்றம் குறை காணாமை, பேதம் காணாமை, விருப்பு வெறுப்பு இல்லாமை, இவை எப்படி நிலைபெறும்? எந்த விதையை, நாம் ஊன்றுகிறோமோ, அதன் பலன்தானே, நாம் அனுபவிக்க முடியும்? நாம் எதைக் கொடுக்கிறோமோ, அதைத் தானே வாங்க வேண்டும்? நாம் எதை வாங்குகிறோமோ, அதைத்தானே கொடுக்க வேண்டும்?"



# "அதுதானே நியதி"!

ஆனால் ஓர் உண்மை: கண்டிப்புடனும், தண்டனையுடனும், வேத சாஸ்திர பாடம் போதிக்கலாம்! அது அனுபவ ஞானமல்ல! அது வாய்ஞானமே! மேலும் கண்டிப்பு தண்டிப்புடன், பாடம் போதிக்கலாம்? அந்த "வேகத்தில்" அது நிலைபெற்று நிற்பது போல் நிற்கும். அது "நிலைக்காது"! எந்த வேகத்தில் அது வந்ததோ, அந்த வேகத்தில் அது "மறையும்" அல்லது "மாறும்"! இது அனுபவ ஞானிகளின் முடிந்த கருத்தாகும்!

இதமாகவும், மிதமாகவும், இறை உணர்வோடும், பொறுமையோடும் போதிக்கலாம், அது வாய் ஞானமல்ல! அது அனுபவ ஞானமாகும்! ஆனால் அது உடனே நிலைக்காது! உடனே பலன் தராது! விதைத்த விதை உடனே முளைக்காது! கருவுற்ற உடனே குழந்தை பிறக்காது! ஆனால் கிடைக்கும் "பலனே நிலைபெறும்." "அழியாது!" அது மெல்லப் பாயும் ஜலம் போலாகும்! ஆமாம்???



இக்காலம் "கலியுக கம்யூட்டர்" காலமாகும்! வேகத்தோடு கூடிய, அவசர காலமாகும்! உடனே "பலன்!" (பதில்) தெரிய வேணுமென்ற துடிப்பான காலம்!

இனி இதை மாற்றவோ, மறுக்கவோ, விலக்கவோ, எவராலும் முடியாதுதான். இதைச் சொன்னாலும், பலமுறை விளக்கினாலும், செவிடன் காதில் சங்கு ஊதிய நிலையும், "புரியாத புதிராகவும்" தான் தோன்றும்! ஸத்தியத்தை நோக்கிச் செல்லும் "எந்தகுருவும், எந்தசாதகனும்!" கண்டிப்பும் தண்டிப்பும் நிறைந்த "சிட்சிப்பு!" இல்லாமல் இருக்க வேணுமென்று ஸ்ரீபாதம் பற்றி வேண்டுகிறேன்!

உ. ஜீவ அழிப்பு:- இது ஸத்குரு செயலாகும். இது மரணம் என்ற அதாவது கொலை என்ற, சம்ஹாரம் என்ற அழிப்பு நிலை இல்லவே இல்லை! இதை ஜீவரட்சிப்பு என்ற, இறை நிலையில் பார்த்தால், உடல் உலக நிலையில் தோன்றும்,

இறைவன் செயலாக



"மண்! பொன்! பெண்!"
என்ற பிரவர்த்தி நியதியில், "நாமரூபமாக!" தோன்றி, ஒன்றுக்கொன்று
ஆதாரமாக! ஆதரவாக! ஆகாரமாக!
"ஆதரிக்கும்" நிதி 'ரட்சிப்பாகும்!

இங்கு ஜீவ அழிப்பு எனயாம் குறிப்பிடுவது:— அறியாமையின்
மனிதன் நான் ஜீவன் என்கிறான். யாம் நிறைபர சொரூபமே
என்கிறோம். உறவு நட்பு உண்டு என்கிறான். இது அவரவர்
வினையின்படி போட்ட வேஷம் என்கிறோம். சொந்த பந்தம் பாசம்
உண்டு என்கிறான். வினையை பரிமாற்றம் செய்ய வந்த பதுமை
கள் தான் என்கிறோம். பொன் பொருள் சுகம் என்கிறான்.
அவை அனைத்தும் மண்ணே என்றும், சிப்பியில் தோன்றிய வெள்ளி
யென தோன்றும், ஓர் மயக்கமே என்கிறோம். ஆண் பெண் உடல்
உறவே, சொர்க்கம் என்கிறான். அரிப்பெடுக்கும் படை
போன்றது, உன் போகம் என்கிறோம். பட்டம் பதவி புகழ்
பேர், இல்லாமல் வாழ முடியாதே என்கிறான். அவை அனைத்தும்
வினையினால் வந்த, ஜனன மரணப் படுகுழி என்கிறோம்.
சொந்தபந்த உறவும், பணமும் இல்லாமல் வாழமுடியாதே என்கிறான்.



அவைகளைத் தந்தும், அவைகளாய் நின்றும்,
ஸ்ரீ பகவானை ஏன் மறந்தாய் என்கிறோம்?
ஞானமான வார்த்தைகளும், அதன் செயல்களும்,
ஏன் வரவேண்டும் என்கிறான். அவைகளை
நீதானே கொடுத்தாய், அப்படி கொடுத்ததை
நீதானே வாங்கவேண்டும் என்கிறோம்? நான் கொடுத்தது
எனக்கே தெரியவில்லையே என்கிறான். நான், என்றல்,
என்னுடையது, என்ற அஹங்காரமும், அதிகாரமும்,
அபிமானமும், மறைந்துக் கொண்டதால், உனக்கு தெரியவில்லை
என்கிறோம். நானும் கோவில் போகிறேன். வீட்டில் பூஜை
செய்கிறேன். பஜனை, ஸத்ஸங்கம், ஸத்காரியம், தான
தருமம், செய்கிறேனே, என் கஷ்டம் ஏன் நீங்கவில்லை?
என்கிறான். நீ பண்ணும் அனைத்தும் வியாபாரமாகவும்
(எதிர்பார்ப்பு) விளம்பரமாகவும் (பிறர் பாராட்டும் நிலை)
ஆடம்பரமாகவும் (வீண்டம்பமான நிலை) இருப்பதால் அது
பலன் தரவில்லை, என்கிறோம். என் வீட்டில் மடி, ஆசாரம்
அனுஷ்டானம், பூஜா விதிகளுடன் தானே இருக்கிறேன்
என்கிறான். இவை அனைத்தும் புறச் செயல்தானே? உன்
உணர்ச்சிகள் சம்பந்தப்பட்டது தானே? அக உணர்வாக



உ

# "நீ ஒருவனே வேண்டும்"!

எனக்கூறி அழுதாயா? கண்ணீரை காணிக்கை ஆக்கிறாயா? உன் உள்ளத்தை அவனுக்கு ஆலயமாக்கிறாயா? என்கிறேன்! நானும் பலகாலம் ஞானபாடம் கேட்கிறேனே, என் உள்ளம் இன்னமும் பக்குவப்படவில்லையே, காரணம் என்ன? என்கிறேன்.

# "பிறர் மேலேயே கவனம்"!

செலுத்துவதனால் வரும் அஹங்காரம், அதிகாரம், உடைமை, உரிமை, ஆதிக்கம், பாராட்டுகளை ஏன்

# "குறைக்க"!

மாட்டேன் என்கிறாய்? என்றேன்.

(அவைகளை நிறுத்த முடியாது. ஆனால் குறைக்கலாம்)

இப்படியாக இன்னமும் பல நிலைகளில், அறியாமையால் காமமும், கலக்கமும், கவலையும், பயமும் கொண்ட

# "கவனக்குறைவான்"! நான் ஜீவன்"!

என்ற ஜீவத்துவத்தை அழிப்பதுவே ஜீவ அழிப்பாகும். ஜீவன் நான் என்ற நிலை மாறி, நாம் அதுவே அதுவே நாம்! என்ற பரஸ்திதியை பெறுவதுவே



# "ஆத்ம சாட்சாத்" காரமாகும்.

## இதுவே ஜீவத்துவத்தை அழித்து ஜீவன் முக்தியை கொடுக்கும், ஜீவ அழிப்பாகும்!!!

# "ஓர் சாதகனின் தெளிவு"!!!!!

1. ஸ்ரீநாரதர் திருமஹான்களிடம் சொன்னார். இப்போது ஸ்ரீபகவான் ஊசித்துவாரத்தின் வழியாக ஓர் ஒட்டகத்தை போகவும் வரவும் செய்து விளையாடிக்கொண்டிருக்கிறார் என்றார். அவ்விருவரில் ஒருவர் சொன்னார்; ஊசித்துவாரம் எங்கே? ஒட்டகம் எங்கே? போவதாவது? வருவதாவது? இது சுத்தப் பொய் என்றார். அவர் 2.

நம்பிக்கை இல்லாத தன்மையினால், இறைநிலையை அடையவில்லை. மற்றவர் சொன்னார்; இறைவன் சர்வ ஆற்றல் உள்ளவர். அவரால் ஊசித்துவாரத்தை பெரிது பண்ணவும் முடியும். ஒட்டகத்தை சிறிது பண்ணவும் முடியும். இறைவனால் ஆகாத காரியம், எதுவும் கிடையாது; என முழுமையாக நம்பினார், அவர் இறைநிலையை அடைந்தார். ஆகவே இறை நம்பிக்கை பூரணமாக வேண்டும்.

நாம் அஞ்ஞான உறக்கத்தில் இருக்கிறோம். ஆனால் நம் குருவோ ஞான விழிப்பு நிலையில் இருக்கிறார். அவர் சொல்வதை அப்படியே, ஏற்போம் என்ற திறத்தையும்; நாம் குரு கிருபையால், ஜீவன் முக்தி பெறுவோம் என்பதைவிட, பெற்றுவிட்டோம் என்பதில், அசைக்கமுடியாத வைராக்கியம் வேண்டும்!



உ

2. மண், பெண், பொன், இம்மூன்றிலும், சர்வ ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.
மண் என்றால் விரிவுபடுத்த வேணுமென்ற ஆசை.
பொன் என்றால் சேமிக்க (சேகரிக்க) வேணுமென்ற ஆசை.
பெண் என்றால், மோகம் என்றும், போகம் என்றும் பொருள்படும். ஆண் பெண் உறவில், வரும் ஆசை. நாமரூப எந்த பொருள் மீதும், வெறித்தனமான ஆசை. ஆகிய இந்த மூன்று ஆசை களிலும்; ஆசையே துன்பத்திற்கு காரணம். என்பதை உணர்ந்து, இவை அனைத்தையும், கோடானுகோடி ஜன்மாவில், எடுத்தெடுத்து அலுத்துப்போனேன் ஐயனே! இவை போதும் ஐயனே போதும். என பூரண நிறைவு வேண்டும். வெறுக்கவோ, விரோதிக்கவோ, துவேஷிக்கவோ, நிக்ரஹம் பண்ணவோ, (துறக்கவோ) வேண்டாம்.

3. உறவோ நட்போ, இவை சொந்த பந்த பாசத்தின் நிழல் அல்ல. அவரவர் புண்ணிய பாபங்களை, ஒருவருக்கொருவர், பரிமாற்றம் செய்ய வந்த கூட்டம் என்ற திட நம்பிக்கையுடன் சந்தேகம், கலக்கம், பயம், இவைகளை ஒழித்துவிட்டு, நாம் கொண்ட கடனை வாங்கிவிட்டு, பட்ட கடனை தீர்த்துவிட்டு, நமக்காக ஸ்ரீபகவான் நம்மீது கருணை கொண்டு, அவர்களை வரச்செய்தும் நம்மை போகச்செய்தும், எவ்வளவு எளிதாகவும், அதிசுலபமாகவும் செய்வதை எண்ணி, எல்லாம் நீயே! எல்லாம் உன்னால்! எல்லாம் உன்னுடையதே! என பூரண நிறைவுடன், எக்குறையும் இல்லாமல், இறை குரு உணர்வோடு இருக்க வேண்டும்.



4. ஸ்ரீபகவானிடமும், ஸ்ரீகுருதேவரிடமும், எந்த எதிர்பார்ப்பும் இருக்கக் கூடாது.

தூலத்திற்குரியதை, ஸ்ரீபகவான் சிரத்தையுடன் செய்கிறான், என்ற நம்பிக்கையும். ஸ்ரீகுருதேவரோ மனமற்ற அவர்; மனமுற்ற நம் மனதை, அந்தர்யாமியாக, இருந்து எடுத்து எடுத்து, துடைத்து துடைத்து, மனதை அறிவாக்கி (நிறைநிலை தந்து) அறிவை மஹத்தாக்கி, (பரநிலை தந்து) ஜீவாத்மாவாக இருந்த எம்மை, பரமாத்மாவாக ஆக்கி, அவர் பூரணநிலையாகிய, பரசொரூபத்துடன் இரண்டற கலக்கச் செய்து, சொல்லவொண்ணா விளக்கவொண்ணா, நிலை தந்தவரை எப்படி போற்றுவது? எப்படி புகழ்வது? அது உபசார வசனமே! என ஆழ்ந்த அமைதி சாந்தியுடன், சும்மா சுகமாக இருப்போம்.

5. ஸ்ரீகுருதேவர் சொல்லும், அனுபவ பாடங்களில், ஏதேனும் உனக்கு, உணர முடியவில்லையாயின்; ஆத்திரம் அவசரம் கொண்டு, துடிப்பின் வேகத்தை காட்டாதே! இங்கு பொறுமையே உன் திருவுருவாகும். இங்கு கலக்கம் உற்ற இடத்தில் தான். நீ கேட்டு அவர் தருவதாக இருந்தால் நீ இன்னமும் பக்குவப்படவில்லை. ~~கலக்கமுற்ற இடத்தில்,~~ (நீ கேட்காமலேயே அவர் கொடுத்தால் நீ பக்குவப்பட்டுவிட்டாய். இங்கு உன்மனமே பக்குவத்திற்கு, தக்கபடி அது அமையும். காலம் முன்பின் ஆகலாம். அது நடந்தே ஆகவேண்டும்! நீயும் பெற்றே ஆகவேண்டும்! நீயும் முடிந்தே ஆகவேண்டும்!



உ

6. ஞானதிருஷ்டி என்பது, தூர தேசங்களையோ, வேறு உலகங்களையோ, கோடானு கோடி கோள்களையோ, அங்குள்ள நிலவரங்களையோ, பார்ப்பதும் அல்ல. கேட்பதும் அல்ல. உணர்வதும் அல்ல. (அது இறைவன் செயல்) அவைகள் தேவையும் இல்லை!

அவை மாயா காரியமாகும். அவை ஸ்ரீ பகவானுக்குரியதாகும்.

ஞானிகளுக்கு பக்குவ ஆன்மாக்களின், உள்ளமே தேவை. மனமே முக்கியம். எத்தனை கோடி அண்டங்களில், எங்கெங்கு, எவ் வடிவில் இருந்தாலும், உள்ளம் மட்டும், மாயாவின் மைந்தரை, (மாயா சூட்சும வடிவமாக) இருப்பதால் இறைநிலையை தமக்குள் அடங்கிய நிலையில் ஞானி ஒருவனே வைத்திருப்பதால் உள்ளங்கை நெல்லிக் கனிபோல், உணர முடியும்.

தோணுவதல்ல. காண்பது மனம். அறிவது (உணர்வது) அறிவு.

இது சர்வசாட்சித் தன்மையாகிய, அகண்ட பாவனையோடு, இருப்பவர்களுக்கே சாத்தியமாகும். இந்நிலை பெற்றவர், எந்த நாடு, எந்த கோள், எந்த அண்டம், இவைகளில் உள்ள பக்குவ ஆன்மாக்களை மட்டும் கண்காணிக்கவும், கடைத்தேற்றவும் முடியும்! அவர்கள் மறைநிலையில், பக்குவப் படுத்தியும், பக்குவம் கொடுத்தும், ஜீவன் முக்தனாக்க முடியும் என்பது, ஸ்ரீ மஹான்களின் அனுபவமாகும். ஆகவே



உ

தன்னை அறியும் அறிவு பிரகாசிப்பதே ஞானதிருஷ்டி யெனச் சொல்லுவார்கள். ஊர், உலக, ஜீவர்களையும், அதன் இயக்கங்களையும், அறிவதோ சொல்வதோ ஞானதிருஷ்டி அல்ல. ஒவ்வொரு சாதகர்களும், தங் கவன சக்தியோடு, ஸ்ரீ ஸத்குரு வாக்கிய சிரத்தையில், கவனமாகவும், தம்மையே முழுமையாக அர்ப்பணிக்க நிலையும், நான், என்றல், என்னுடையதை, இல்லாமல் கரைத்துக் கொண்டீர்களானால், உங்கள் ஸத்குரு தேவரின், ஞான திருஷ்டியிலிருந்து, தப்ப முடியாது. இது ஸத்தியம்! (அதுவே புலி வாய் மாமிசம் போல் ஆகும்)

7. நீ கொண்டு வந்ததும் இல்லை. கொண்டு போவதும் இல்லை. உன் வினைட்டவோ, இந்த மண்ணிலேயே எடுத்ததாகும். அதையும் எங்கும் கொண்டு செல்ல முடியாது. பின்னேன் இந்த உரிமைப் போராட்டம்? ஏன் இந்த உரிமை போராட்டம்?

அவன் நாமாவைச் சொல்லி, எல்லாம் நீயே என விளையாடவா மே? ஏன் முந்திரிக் கொட்டையைப் போல, நான்! நான்! நான்! எனச் சொல்லி வினையின் பாரத்தை ஏன் ஏற்றுக் கொள்ளவேண்டும்? விளையாட உரிமை உண்டு. வினையாக உரிமை கொண்டாட இடம் இல்லை!



ௐ

8. அதனுக்கு எங்கும் கண்களும்; எங்கும் காதுகளும், எங்கும் கால்களும், எங்கும் அபய கரங்களும். கிருபை தந்தோம் அபயம் தந்தோம், பயம் தவக்கம் வேண்டாம், என குரல் கொடுக்கும் வாக்கும், எங்கும் உண்டு என்பதே ஸத்தியமாகும். வேண்டி அழைத்தால், உன்னைப் பார்க்கும். உருகி அழைத்தால் உன் குரல் கேட்கும். கூப்பிட்டவுடன் ஓடி வரும். நீயே கதி என்றால் உன்னைத் தன் அபய கரங்களால் அரவணைக்கும். யாம் இருக்க பயம் ஏன்? என அபயஸ்தம் தரும் அழைத்து வாக்கும் எப்போதும் உண்டு! பின் உனக்கு மூற் தவன சக்தி எதற்கு? உனக்கு நற் காப்பு சக்திதான் எதற்கு?? நற் தவன சக்தி (ஒன்றே) எல்லாம் நீயே என்ற தெய்வ பலம் ஒன்றே போதுமே? (அளவோடு புசி) அதாவது எல்லாம் நீயே! எல்லாம் உன்றால்! எல்லாம் உன்னுடையதே என்ற நிலையில், வாக்கில் இனிமையும், கனிவும், இறை உணர்வும்! வாழ்க்கையில் எளிமையும், பணிவும், எல்லாம் நலமே என்ற நிலையில், பொறுமையும் கொண்டால் முதலில் அவன் ஆகலாம்! பின் அது ஆகலாம்! இங்கு உன் நம்பிக்கையே உன் இரு கைகளாகும்! நீ கொண்ட வைராக்கியமே உன் இரு கால்களாகும்!!



9. உ

உன் தவத்தின் விளக்கங்களே,
உனக்கு தெரியாமலிருக்க, பிறிதொரு
தவக்கணக்கு உனக்கு எப்படி தெரிய முடியும்?
அப்படியானால், பிறர் செய்யும் செயலையும்,
பிறர் பேசும் வார்த்தையுமே குற்றமாக
பாவனை செய்து திருத்த முயற்சிக்கிறாயே, இது என்ன
அறிவீனமான செயல்? நீ பிறர் செய்கையையும் பிறர்
வார்த்தையையும், உன்னால் திருத்த முடியவில்லையென்றால்,
பிறர் உன் செய்கையையும் உன் வார்த்தையையும், திருத்த
வில்லையே, என குறைபடுவது ஏன்? இதில் ஓர் ரகஸ்யம்
என்னவென்றால்? நீ பிறருக்கு மதிப்பு மரியாதை,
(பெரியவன் சிறியவன், படித்தவன் படியாதவன், ஏழை பணக்
காரன், உன் வேலையில் மேல் கீழ் உள்ளவன் என பாராமல்)
கொடுத்து நீ அடங்கி நடந்தால், அவரும் உனக்குள்
அடங்கி நடப்பர். அடங்கியே ஆக வேண்டும்!
இல்லையேல், எல்லாம் அவன் செயல் என்ற, பக்திய
வாசகம், பொய்யாகி விடும்! மாறாக நீ அவர்களை மதிக்
காமல், அடக்க எண்ணினால், அவர்கள் உன்னை அடக்கி விடுவர்.
(அடங்கியே ஆகவேண்டும்)
மதிப்பும் மரியாதையும், நீ பேதம் இல்லாமல் கொடுத்தால்,
உனக்கும் மதிப்பு மரியாதை தானே கிடைக்கும். நீ பேதமும்
குற்றம் குறையும் கண்டால் அவரும் உன்னிடம், பேதமும்
குற்றம் குறையும் பார்க்கத்தான் செய்வர். இதுவே நியதி!



உ

## 10. குடும்பிகளுக்கு ஓர் தர்மம்:

ஓர் ஆண்மகன், வேலை தேடி, பணம் சம்பாதிக்கும் வரை (படிப்போ, அது சம்பந்த உணவு, உடை, இருப்பிடம் இவைகளுக்கு) அப்பா, பாட்டன் சொத்தில், செலவு செய்ய உரிமை உண்டு. பணம் தேடி வருமானம் வந்தபின், அப்பா பாட்டன் சொத்தில், ஒரு பைசாவாவது எடுத்து உனக்கு செலவு செய்ய உனக்கு உரிமை இல்லை, அது மஹாபாபம் என்றும். அதற்கு ரௌரவாதி நரகம் உண்டென்றும், உண்மையின் சாஸ்திரம் சொல்கிறது. அந்த ஆண்மகன், தன் மாதா பிதா ஒருவரோ அல்லது இருவருமே இருந்தால் அவஸ்யம் அவர்களுக்கு, உணவு உடை இருப்பிடம் தந்தே ஆகவேண்டும்! அப்படி கொடாதவன் பிறந்ததும் வீணே! அவனுக்கு பக்தியும் முக்தியும் இல்லை. நாம்தான் ஆத்ம சாதனை செய்கிறோமே, என அலட்சியம் செய்யாதீர். ஆனால் சாதனை முயற்சியானால், இந்த சட்டம் அவர்களுக்கு இல்லவே இல்லை. இச்சாதனை முயற்சியை உன் அனுபவத்தினால் உணரலாம். மேலும் ஆண்களோ, பெண்களோ, உடல் உழைப்பு இல்லாமல், உணவு, உடை, இருப்பிடம் ஆகிய மூன்றும் பெற்றால், பாபத்தையே தேடிக்கொள்கிறோம், எனப் பொருள் கொள்க. உழுது கொண்டிருந்தாலும் அழுது கொண்டிரு என்பது ஓர் பழமொழி! அதாவது கர்மா சம்பந்த உழைப்பு இருந்தாலும், ஸ்ரீ பகவன் நாம ஸ்மரணை உருக்கமுடன் இருக்க வேண்டும். அதுதர்மமாயும் முடியும். வேறு தர்மமாயும் தொடராது!



உ

# "ஸ்வய அநுபவம்"!

எண்ணம், சொல், செயலால் எவ்விடத்தும் "அடங்கி இரு"! "அடக்க எண்ணாதே"! "இதமாக, மிதமாக" "இறை உணர்வுடன் பேசு"! எதையும் "நலமாக எண்ணு"! "நலமாகவே" இருப்பாய்! "ஆத்திரம்", "அவசரம்", "வேகம்" வேண்டாம்! "பொறுமை", "அன்பு", "பணிவு", "கனிவு"! அவசியம் வேண்டும்! "தேவையும்", "ஆசையும்" குறைத்துக் கொண்டே வந்தால், அவை தாமே நின்று விடும். அவைகளை வெறுத்து விலக்கினால், அவை வேறு ஓர் "நாமரூபம்" தாங்கி வந்தே தீரும்! தேவைகளையும், ஆசைகளையும், இறைவன் கருணையாக எண்ணி, "போதும்" என "நிறைவு" கொண்டால் அவை தாமே மறையும்!



"காண்பதையும்". "கேட்பதையும்"! அப்படியே நம்பி விடாதே. அங்கு இறைவுணர்வோடு, பொறுமையுடன் காத்திருந்தால், அவஸ்யம் விளக்கம் நன்கு தெரியும். உனக்கு மேலே கூறிய வைகளில், "கலக்கம்", "களங்கம்", "சந்தேகம்", "பயம்"! ஏற்பட்டால் அதுவே பலிதமாகும்! அங்கு இறைகுரு உணர்வு இருந்தால், மேலே கூறிய குண தோஷம், தோற்றுமறையும்! எல்லாம் "அவன்" பொருளே! எல்லாம் "அவன்" செயலே என இவை உனக்கு அனுபவமானால், "அவனன்றி" அணுவும் அசையாது, என்பதுவும் அனுபவமாகும். அங்கு "உனக்கு"! இருப்பேது? இயக்கமேது? வினையேது? "மனதின்" பிடிப்பே பந்தம்! "மனதால்" விட்டால் மோட்சம். உன் வினையின்படி, இயல்பாக "இருப்பதிலும்", "கிடைப்பதிலும்", "நடப்பதிலும்"! அவை இறை கருணையென நம்பு. அங்கு வினையில்லை. ஜன்மாவில்லை!



"நான்" இறந்தால் "நாம்" ஆகலாம்!
"நாம்" மறைந்தால் "அது" ஆகிநிறையலாம்!
"நாம் அது" ஆகி நிறைந்தால், பிரம்மா
னந்த சுவையென ஆகலாம். "பிரம்மானந்தம்"
"நாம்" என ஆகிவிட்டால், அதை சொல்லவோ, விளக்
கவோ, வாக்கும் இல்லை! வரிவடிவமும் இல்லை!
"மாயை" என்றால் மருட்சி! அதாவது ஒன்று பலவாகுதல்!
"மனம்" என்றால் அவற்றில் மயங்கி கலங்கி வீழ்தல்!!
(வீழ்தல் என்றால் ஜனன மரணத்தில் வீழ்வதாகும்)
மனம் தோன்றிய இடமே மாயையாகும். ஆகவே மனதை மாயையி
டம் விட்டுவிட்டால், அங்கு "மருட்சியும்" இல்லை
(மருட்சியும்)
"மயக்கமும்" இல்லையென்றாகிவிடும். அப்படி
விடும் நிலை:- "எல்லாம் நீயே! எல்லாம்
உன்னதே! எல்லாம் உன்னுடையதே!!"
என நிர்மலமாக விட்டுவிடு. அங்கு நீ "பூரணமாகவே"
(காலாதீத பரசொரூபமாகவே) இருப்பாய். இது சத்தியம்!
எல்லாம் ஒன்றே! அது நவமே!
அது சுகமே!
அது யாவுமே! அது நீயே! இது சத்தியம்! சத்தியம்!! சத்தியம்!!!

பாபா.


அன்பின் குடில்
எல்லாம் நீ!
Adobe of Love
You are Everything!